மக்கள் நேசன்

# கார்த்திகேசன் மாஸ்ரர்



வீ. சின்னத்தம்பி

மக்கள் நேசன்

# கார்த்திகேசன் மாஸ்ரர்

Rejected

**வேடிக்கை மனிதரைப் போல்**
**நான் வீழ்வேனென்று நினைத்தாயோ?**

*தேடிச் சோறுநிதந் தின்று - பல*
*சின்னஞ் சிறுகதைகள் பேசி - மனம்*
*வாடித் துன்பம்மிக உழன்று - பிறர்*
*வாடப் பலசெயல்கள் செய்து - நரை*
*கூடிக் கிழப்பருவ மெய்தி - கொடுங்*
*கூற்றுக் கிரையெனப் பின்மாயும் - பல*
*வேடிக்கை மனிதரைப் போலே - நான்*
*வீழ்வேனென்று நினைத்தாயோ?*

— பாரதியார்.

N.A

| | | |
|---|---|---|
| நூல் பெயர் | : | மக்கள் நேசன் கார்த்திகேசன் மாஸ்ரர் |
| ஆசிரியர் | : | வீ. சின்னத்தம்பி |
| முதல் பதிப்பு | : | 1993 செப்டெம்பர் 10 |
| அச்சு | : | அருண் பிறிண்டேர்ஸ், யாழ்ப்பாணம். |
| உரிமை | : | வீ. சின்னத்தம்பி, வட்டுமேற்கு, வட்டுக்கோட்டை. |
| விலை | : | ரூ. **35 - 00** |

# நன்றி

*இச்சிறிய நூல் வெளிவர ஊக்கமும் உதவியும் அளித்த நண்பர்களுக்கும்; கட்டுரைகள், கவிதை எழுதியும் நகைச்சுவைத் துணுக்குகளை வழங்கியும் உதவிய கார்த்திகேசன் மாஸ்ரரின் அபிமானிகளுக்கும்; அழகுற அச்சிட்டு உதவிய அருண் பிறிண்டேர்ஸ் நிறுவனத்துக்கும், ஊழியர்களுக்கும் மனமார்ந்த நன்றி.*

— **வீ. சின்னத்தம்பி.**

# மக்கள் நேசன்......

அவர் ஒரு கிரிக்கெட் விளையாட்டு அபிமானி; கிரிக்கெட் விளையாட்டு வீரர்; கிரிக்கெட் "சீசனில்" ட்ரான்சிஸ்டர் வானொலிப் பெட்டியுடன் இருப்பார். இளம்பிள்ளைகள் கிரிக்கெட் விளையாடினாலும் "டெஸ்ட் கிரிக்கெட்" டைப் பார்ப்பதுபோல் ரசிப்பார்.

அவருக்கு கணிதவியல் விருப்பமான பாடம்; இலக்கியத்தைப் படிப்பிப்பது போல் கணித பாடத்தைப் போதிப்பார்.

அவர் ஓர் ஆங்கில இலக்கிய விற்பன்னர்; ஆங்கிலக் கவிஞர்களின் நூல்களை அழகாக வாசித்து உச்சரித்து தனியாகவும் பலர் மத்தியிலும் ஆராய்வார்.

அவர் ஒரு தமிழ் இலக்கிய ஆர்வலர். நவீன தமிழ் இலக்கியத்தில் அத்தகையவரைப் பொறுத்தவரையில் அரிதான ஈடுபாடு கொண்டிருந்தார்.

அவருடைய மாணவர்கள் பலர் தமிழ் இலக்கிய உலகில் தலைசிறந்த இலக்கிய விமர்சகர்கள், நாவலாசிரியர்கள், சிறுகதை எழுத்தாளர்கள், நாடகாசிரியர்கள், பத்திரிகையாளர்கள் ஆகியுள்ளனர். தவிர மாணவரல்லாத பிறரும் "மண்ணிற் புழுவாக நெளிந்த தம்மை மனிதராக்கிய தெய்வம்" என்று பாராட்டியுள்ளனர்; "அவர் தான் நாங்கள் கற்ற பல்கலைக் கழகம்" என்று குறிப்பிட்டுள்ளனர்.

அவர் மென்மையானவர். மற்றவர் மனதைப் புண்படுத்தி விடக்கூடாது என்ற எண்ணத்துடனேயே வாழ்ந்தவர்.

அவர் அழகியல் ரசனையில் ஆழ்ந்தவர். எழுதும் எழுத்திலே, பேசும் பேச்சிலே, நடக்கும் நடையிலே, உடுக்கும்

உடையிலே, உண்ணும் முறையிலே—இவ்வாறு வாழ்க்கையின் ஒவ்வோர் அம்சத்திலும் அழகியல் ரசனைகளைக் கொண்டவராக அவர் திகழ்ந்தார்.

மலாயாவின் " தைப்பிங் " நகரத்தில் பிறந்த அவர் குடும்பத்தால், பிறப்பால், வளர்ப்பால், படிப்பால் ஒரு நகரவாசி. ஆனால் கிராம மக்கள் மதித்துப் போற்றும் ஒரு மனிதனாக வாழ்ந்து மறைந்தார்.

மேற்குறிப்பிட்ட குணாம்சங்கள் பொருந்திய தன்னிகரில்லாத அந்த மனிதன் " கம்யூனிஸ்ட் கார்த்திகேசன் " என்று அழைக்கப்படும் முருகபிள்ளை கார்த்திகேசன் ஆவார்.

" நாங்கள் எத்தனையோ கம்யூனிஸ்டுகளைப் பார்த்து விட்டோம். ஆனால் தான்கொண்ட கொள்கைக்கு விசுவாசமாக தனது வாழ்வின் இறுதிநாள் வரை இருந்த ஒரேயொருவர் கார்த்திகேசன் மாஸ்ரர் தான் " என்று பலரும் கூறுவதை இன்றும் கேட்க முடிகின்றது.

கார்த்திகேசன் மாஸ்ரரிடம் கல்வி கற்றோம்; ஆங்கிலம் படித்தோம் என்று கூறுவதில் மட்டும் அல்ல, கார்த்திகேசன் மாஸ்ரரிடம் அடி வாங்கினோம் என்று கூடக் கூறுவதில் பெருமை அடைவோர் இருக்கிறார்கள்.

கார்த்திகேசன் மாஸ்ரருடன் வீதிகளில் சென்று போஸ்டர்கள் ஒட்டியதையும் தேநீர்க் கடைகளில் " பிளேன்ரீ அடித்ததை"யும் நினைவுகூரும் பலர் அவர் கடன் வாங்கியதையும் கடன் கொடுத்ததையும் அதே அன்புடன் எடுத்துரைப்பார்கள்.

அவருடைய சம காலத்தவர், சம தொழிலைச் செய்தவர், சமகட்சியாளர்களிலும் பார்க்க கார்த்திகேசன் யாழ்ப்பாண மக்களின் இதயங்களில் நிறைந்திருக்கிறார்.

ஆசிரியர் கார்த்திகேசன் காலமாகி 16 ஆண்டுகள் கழிந்துள்ளபோதிலும் யாழ்ப்பாணம் என்ற காட்சியிலிருந்து அவரின் தோற்றம் விலகாமல் இருப்பது எதனால்?

கார்த்திகேசனின் வாழ்க்கை வரலாறு இக்கேள்விக்குப் பதிலை அளிக்க முடியும்.

# மலாயாவில் பிறப்பு

கார்த்திகேசனின் தந்தை முருகபிள்ளை யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டையைச் சேர்ந்தவர். அவர் இந்த நூற்றாண்டின் ஆரம்பகாலத்தில் வீட்டு நெருக்கடியால் ஜீவனோபாயம் தேடி மலாயாவுக்குச் சென்ற யாழ்ப்பாண இளைஞர்களில் ஒருவர்.

மலாயாவில் திரு. முருகபிள்ளை ஒரு வைத்தியசாலை டிஸ்பென்சராக (உதவி வைத்தியர்) வேலை பார்த்தார். சித்தன்கேணியைச் சேர்ந்த தங்கரத்னத்தை திரு. முருகபிள்ளை திருமணம் செய்தார்.

அவர்களுக்கு மலாயாவின் "தைப்பிங்கில்" 2 ஆண் குழந்தைகளும் 2 பெண் குழந்தைகளும் பிறந்தன. மூத்த ஆண் குழந்தையே கார்த்திகேசன் ஆவார். அவருக்கு அடுத்ததாக இப்பொழுதும் மலேசியாவில் வாழ்கின்ற திரு. வைத்தியநாதனும் இலங்கையில் வாழும் திலகவதியும் இலண்டனில் வாழ்கின்ற இரத்தினாவதியும் பிறந்தனர்.

1919 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 25 ஆம் திகதி பிறந்த கார்த்திகேசன் தமது ஐந்தாவது வயதில் தம்பியார் வைத்தியநாதனுடன் சேர்ந்து தாயுடன் முதல் தடவையாகத் தமது தாய்நாட்டுக்கு வந்தார்.

தாயார் சில காலம் இங்கு தங்கிய பின் கணவனுடன் சேர்ந்துவாழ மலாயா திரும்பிச் சென்றுவிட்டார்.

அப்பொழுது சிறுவன் கார்த்திகேசன் அவருடன் செல்லவில்லை. வட்டுக்கோட்டையில் ஓர் உறவினரான பெண்மணியுடன் தங்கியிருந்து வட்டுக்கோட்டை திருஞானசம்பந்த வித்தியாசாலையில் தமது ஆரம்பக் கல்வியைப் பெற்றார்.

இவ்வாறு கற்றபொழுது சிறுவன் கார்த்திகேசன் சக மாண வர்களுக்கும், கீழ்வகுப்பு மாணவர்களுக்கும் தனது புத்தகங் களைக் கொடுத்து உதவினார் என்று வட்டுக்கோட்டை ஆசிரி யர் திரு. மருதபிள்ளை கூறுவார்.

அவர் சில ஆண்டுகள் வட்டுக்கோட்டையில் தமது ஆரம் பக் கல்வியைப் பெற்ற பின் மீண்டும் மலேசியாவின் தைப்பிங் கிற்குச் சென்று அங்கு ஆங்கிலக் கல்லூரியில் தமது கல்வியைத் தொடர்ந்து பெற்றார்.

கல்லூரியில் அவர் சிறந்த மாணவனாகவும், கிரிக்கெட் விளையாட்டு வீரனாகவும் திகழ்ந்தார். அவரும் அவருடைய தம்பியும் கல்லூரிக் கிரிக்கெட் கோஷ்டியில் உறுப்பினர்களாக இருந்தனர்.

அப்பொழுதே ஆங்கில மொழியில் அவர் திறமைசாலியாக இருந்தார். அங்கு நடைபெற்ற லண்டன் சீனியர் கேம்பிரிட்ஜ் சோதனையில் அவர் மலாயா முழுவதிலும் மூன்றாவதாகச் சித்தி பெற்றார். என்றாலும் மூன்றாவதாகியதால் லண்டன் புலமைப் பரிசில் அவருக்குக் கிடைக்கவில்லை.

தனயனின் திறமையைக் கண்ட தந்தையாரும் உறவினர்களும் திரு கார்த்திகேசனை உயர் கல்விக்காக இலங்கை பல்கலைக் கழகக் கல்லூரிக்கு அனுப்பினார்கள். வட்டுக்கோட்டையைச் சேர்ந்த உறவினரான திரு. செல்லையா என்பவரின் பராமரிப் பின் கீழ் அவர் கொழும்புப் பல்கலைக் கழகக் கல்லூரியில் உயர் கல்வி கற்றார்.

மலாயாவில் இருந்த தந்தையும், உறவினர்களும் தமது பிள்ளை கார்த்திகேசன் பல்கலைக் கழகக் கல்வி பெற்று ஒரு நீதிவானாக வருவார் வரவேண்டும் என்று விரும்பினார்கள்.

## பல்கலைக் கழகத்தில்

கார்த்திகேசன் இலங்கைப் பல்கலைக் கழகத்தில் உயர் கல்வி கற்ற (1937 — 1941) ஆண்டுகள் எமது நாட்டின் அரசியலில் வெள்ளையர் ஆட்சிக்கு எதிரான உணர்வும் இயக்கங்களும் முகிழ்த்தெழுந்து வளர்ந்த காலமாகும்.

1935 இல் டாக்டர் எஸ். ஏ. விக்கிரமசிங்க, எம். ஜி. மென்டிஸ், ஏ. வைத்திலிங்கம், என் எம். பெரேரா, கொல்வின் ஆர். டி. சில்வா ஆகியோரின் தலைமையில் ஏகாதிபத்தியத்துக்கு எதிரான லங்கா சமசமாஜக் கட்சி ஸ்தாபிக்கப்பட்டது.

லண்டனில் கல்வி கற்றுத் திரும்பிய டாக்டர் எஸ். ஏ. விக்ரமசிங்க, ஏ. வைத்திலிங்கம், பீட்டர் கெனமன், பொன்னம்பலம் கந்தையா ஆகியோர் இலங்கைப் பல்கலைக் கழகத்திலு கம்யூனிஸப் பிரசாரத்தைச் செய்தார்கள்.

இரண்டாம் உலக யுத்தம் ஆரம்பமாகி ஹிட்லரின் பாசிஸத்துக்கு எதிரான உலகளாவிய யுத்த நிலைமை தோன்றிய போது லங்கா சமசமாஜக் கட்சியில் இருந்த கம்யூனிஸ்டுகளுக்கும் ட்ரொஸ்கியவாதிகளுக்கும் இடையில் கருத்து வேற்றுமைகள் ஏற்பட்டன. இதனால் டாக்டர் எஸ். ஏ. விக்ரமசிங்காவைத் தலைமையாகக் கொண்ட கம்யூனிஸ்டுகள் லங்கா சமசமாஜக் கட்சியிலிருந்து பிரிந்து முதலில் ஐக்கிய சோஷலிசக் கட்சி என்பதை அமைத்து பின்னர் 1943இல் இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியை உத்தியோக பூர்வமாக அமைத்தனர்.

மலாயாவிலிருந்து நீதிவானாகக் கல்விகற்க வந்த முருக பிள்ளை கார்த்திகேசன் இந்த அரசியல் சுழல் காற்றில் இழுத்தெடுக்கப்பட்டார். லண்டனிலிருந்து திரும்பிய கம்யூனிஸ்ட் தோழர்களுடன் சேர்ந்து அவரும் இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியின் ஸ்தாபக அங்கத்தவர்களில் ஒருவராகினார்.

திரு. கார்த்திகேசனின் பல்கலைக்கழகக் காலம் பலராலும் பல காரணங்களுக்காக நினைவு கூரப்படுவதுண்டு. திரு. கார்த்திகேசன் பல்கலைக் கழகத்தில் பிரவேசித்த காலத்தில் ஆங்கிலத்திலும், கணிதவியலிலும் அசாதாரண திறமை காட்டினார்.

அப்பொழுது பல்கலைக்கழக ஆங்கிலப் பேராசிரியர் திரு. லுடொவைக்; கணிதவியல் பேராசிரியர் திரு. சி. சுந்தரலிங்கம். இவர்கள் இருவருக்கும் இடையில் கார்த்திகேசன் என்ற பட்டதாரி மாணவனை யார் எடுப்பது என்பது பற்றி ஒரு வகைப் போட்டி நிலவியது.

இறுதியில் பேராசிரியர் சி. சுந்தரலிங்கம் விட்டுக் கொடுத்தார். ''எங்களிடம் கணிதவியலுக்குப் போதிய ஆட்கள் இருக்கிறார்கள். நீ ஆங்கிலத் துறையில் சேர்வதுதான் நல்லது'' என்று திரு. கார்த்திகேசனை அவர் ஆசீர்வதித்துவிட்டார்.

பல்கலைக்கழக காலத்தில் ஆங்கிலப் பிரசுரங்களை வெளியிடுவதில் திரு. கார்த்திகேசன் முக்கிய பங்காற்றினார். 1942 — 43 இல் ''ஸ்ருடென்ற் நியூஸ்'' என்ற ஆங்கிலப் பத்திரிகையின் ஆசிரியராக இருந்தார்.

ட்ரொஸ்கியின் கருத்துக்களுக்கு எதிராகவும், கம்யூனிஸத் தத்துவத்தைப் பிரசாரம் செய்யவும், உலகின் முதலாவது சோஷலிச நாடான சோவியத் யூனியனைப் பாராட்டியும் கார்த்திகேசனின் முன்முயற்சியில் பல நூல்களும் துண்டுப் பிரசுரங்களும் பத்திரிகைகளும் வெளியிடப்பட்டன.

கார்த்திகேசனின் பல்கலைக்கழக வாழ்வில் இன்னொரு சிறப்பான அம்சம், அவர் அங்கு எண்ணற்ற நண்பர்களைப் பெற்றதாகும். பின்னர் இலங்கை அரசியல், நிர்வாக, பொருளாதார, கலை இலக்கிய பத்திரிகைத் துறைகளில் முக்கியமானவர்களாக விளங்கிய பலரும் அவருக்கு நண்பர்களாகினார்கள்.

கம்யூனிஸ்ட் என்ற முறையில் மிகவும் உறுதியானவராக இருந்த கார்த்திகேசன் வாழ்க்கையின் பல்வேறு துறைகளிலும் இருந்த கம்யூனிஸ்ட் அல்லாத எண்ணற்றோரின் நன்மதிப்பையும் நட்பையும் பெற்றது அவருடைய தனித்துவமான குணாம்சங்களில் ஒன்றாகும்.

## திருமணம்

பல்கலைக் கழகப் படிப்பு முடித்து ஆங்கிலச் சிறப்புச் கலைமாணிப் பட்டத்தைப் பெற்ற அதே காலத்தில் கார்த்திகேசன் குடும்ப வாழ்விலும் புகுந்தார்.

பல்கலைக் கழகப் பட்டதாரியாகிய கார்த்திகேசன் அக்காலத்திலும் பின்னரும் பொதுவாக அத்தகையவர்கள் எல்லோரும் செய்வது போல் சீதனத்தைப் பெற்றுத் திருமணம் செய்யவில்லை.

மலாயாவிலிருந்து வந்து தாய் தந்தையரற்று அநாதைகளாக வளர்ந்த சங்கரத்தையைச் சேர்ந்த மூன்று சகோதரிகளில் ஒருவரான வாலாம்பிகை என்பவரை அவர் காதலித்துத் திருமணம் செய்தார்.

பிற்காலத்தில் திரு. கார்த்திகேசன் தமது மனைவியைப் பற்றிக் குறிப்பிடும்போது தமக்கே உரித்தான சொல் விளையாட்டுப் பாணியில் வருமாறு கூறுவார்.

''பக்கத்து வீட்டில் இருந்த பூவரச மலர் ஒன்று என்னைக் கவர்ந்தது. அந்தப் பூவர் ரோசை (Poor Rose – பூவரஸ்) நான் மணந்து கொண்டேன்''

1942 ஆம் ஆண்டில் உறவினரின் ஆதரவு அற்ற நிலைமையில் ஓர் ஏழைப் பிராமணனின் முன்னால் சம்பிரதாய பூர்வமாக செல்வி வாலாம்பிகையைக் கைப்பிடித்துத் தமது மனைவியாக்கிக் கொண்ட செயலுக்காக திரு. கார்த்திகேசனையும் அவருடைய மனைவியையும் இன்னும் மன்னிக்காத தந்தை வழி தாய் வழி உறவினர்கள் இன்றும் இருக்கிறார்கள்.

திருமணம் முடிந்ததும் முடியாததுமாக திரு, கார்த்திகேசன் அப்பொழுதுதான் ஆரம்பிக்கப்பட்டிருந்த இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியில் முழு நேர ஊழியனாகினார்.

## கம்யூன் வாழ்க்கை

அப்பொழுது கொழும்பு பொறளையில் கொட்டா வீதியிலுள்ள 89 ஆம் இலக்க வீட்டில் '' கம்யூன் '' வாழ்க்கை நடத்தினார். மிகக் குறைந்த அலவன்ஸே அவருக்குக் கிடைத்தது.

புதுமணப் பெண்ணும் அவருடன் சென்று கொழும்பில் வாழ்ந்தார்.

"கம்யூன்" வாழ்க்கை ஒரு கூட்டு வாழ்க்கை. கம்யூன் உறுப்பினர்கள் தமது அலவன்ஸுகளைப் பகிர்ந்து ஒன்றாகச் சமைத்து உண்டார்கள். இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியின் இலட்சியத் துடிப்பான இளைஞர்களின் கம்யூன் வாழ்க்கை இலங்கை அரசியல் வரலாற்றிலேயே ஓர் அரிதான நிகழ்ச்சியாகும்.

அப்பொழுது தான் கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகப் படிப்பை முடித்துத் திரும்பியபின் சிலோன் ஒப்சேவரில் கட்டுரை, கதை பகுதிக்குப் பொறுப்பாயிருந்த தொழிலைத் துறந்து இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியின் முழுநேர ஊழியராகிப் பொதுச் செயலாளர் பதவியை ஏற்ற பீட்டர் கெனமன், அவருடைய மனைவி, தேசாபிமானி ஆசிரியராகப் பணியாற்றிய கே. ராமநாதன் மற்றும் பலர் இந்தக் கம்யூனில் வாழ்ந்தனர்.

கம்யூனிஸ்ட் கட்சியின் ஸ்தாபக அங்கத்தவர்களில் ஒருவரான திரு. கார்த்திகேசன் கொழும்பில் கட்சியைக் கட்டியமைப்பதில் சுறுசுறுப்பாக ஈடுபட்டார்.

கொழும்புப் பொதுமக்கள் மத்தியில் அவர்கள் கட்சிப் பிரசாரத்தில் ஈடுபட்டு சொல்லடியும் கல்லடியும் பட்டார்கள்.

தொழிலாளர்களின் வாழ்க்கை நிலைமையை மேம்படுத்த அவர்கள் தொழிற்சங்கங்களை அமைக்க ஆரம்பித்தார்கள். பஸ் தொழிலாளர்கள், துறைமுகத் தொழிலாளர்கள், இறக்குமதி ஏற்றுமதித் தொழிலாளர்கள் ஆகியோரின் தொழிற் சங்கங்களை அவர்கள் அமைத்தார்கள். இவ்வாறு இலங்கைத் தொழிற்சங்க சம்மேளனம் (சி. ரி. யு. எப்.) என்ற தொழிற்சங்க கேந்திரத்தை உருவாக்கினார்கள்.

கட்சியின் தொழிற்சங்க நடவடிக்கைகளில் கலந்துகொண்ட திரு. கார்த்திகேசன் இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியின் உத்தியோகபூர்வமான வாரப் பத்திரிகையான "போர்வார்ட்" (Forward) டின் ஸ்தாபக ஆசிரியராகவும் பணிபுரிந்தார்.

பத்திரிகைப் பணி அக்காலத்தில் இன்றைய காலம் போல் வசதியானதாக இருக்கவில்லை. விஷயதானங்களைச் சேகரிப்பது அச்சுக் கோர்ப்பது, இயந்திரத்தில் பத்திரிகையை அடிப்பது, பேப்பரை மடிப்பது, இறுதியாகப் பேப்பரைக் கொண்டு சென்று விற்பது — இத்தியாதி வேலைகள் அனைத்திலும் ஆசிரியரான திரு. கார்த்திகேசனும் பங்குபற்றினார்.

திரு. கார்த்திகேசன் வரட்சியாக ஏனோர்தானோ என்று எழுதும் இயல்புடையவர் அல்ல. கருத்துக்கு எவ்வளவு முக்கியத்துவமோ அந்த அளவுக்கு வடிவ அழகுக்கும் முக்கியத்துவம் கொடுப்பவர் அவர்.

அரசியலில் ஆழ இறங்கியிருக்காவிட்டால் திரு. கார்த்திகேசன் ஒரு தலைசிறந்த ஆங்கிலப் பத்திரிகையாளனாக விளங்கியிருப்பார் என்ற கருத்தை இத்துறைகளில் பிரபல்யமான பலர் கூறியிருக்கிறார்கள். அவர் சாதாரணமாக எழுதும் ஒரு தனிப்பட்ட கடிதத்தில் கூட ஆங்கிலப் புலமையும் நகைச்சுவையும் எழுத்து நாசூக்கும் மிளிர்வதைக் காணலாம்.

இந்த இடத்தில் பருத்தித்துறையின் கம்யூனிஸ்ட் கட்சிப் பாராளுமன்ற உறுப்பினராக இருந்த காலஞ்சென்ற பொன்னம்பலம் கந்தையா அவர்கள் கொழும்பு ரத்னம் ஆஸ்பத்திரியில் நோயுற்றுப் படுத்திருந்தபோது கூறிய சில வார்த்தைகள் நினைவுக்கு வருகின்றன. போதிய கட்டுரைகளையும், நூல்களையும் தான் எழுதவில்லை என்று அவர் கவலைப்பட்டார்.

திரு. கார்த்திகேசனுக்கு இத்தகைய கவலை இருந்ததோ இல்லையோ தெரியாது. ஆனால் அவருக்குப் போதிய நேரம் இருந்திருந்தால் எமது நாட்டுப் பத்திரிகைத் துறையும் எழுத்துத் துறையும் பெரும் பயனை அடைந்திருக்கும்.

திரு. கார்த்திகேசனின் கொழும்பு வாழ்க்கை 1946 ஆம் ஆண்டு முடிவுற்றது.

இலங்கையின் தமிழ்ப் பகுதிகளில் கம்யூனிஸ்ட் கட்சியை ஸ்தாபித்து வளர்க்கவேண்டும் என்ற நோக்கத்துடன் கட்சியால் பணிக்கப்பட்டு அவர் யாழ்ப்பாணம் வந்துசேர்ந்தார்.

அவருடைய இல்லம் அப்பொழுது யாழ்ப்பாணம் விக்ரோறியா வீதியில் அமைந்த ஒரு வாடகை வீடாகும். அதுவே கம்யூனிஸ்ட் கட்சியின் அலுவலகமாகவும் அமைந்தது.

திருவாளர்கள் சு வே. சீனிவாசகம், வீ. ஏ. கந்தசாமி, பி. பூபாலசிங்கம், எம். சி. சுப்ரமணியம், ராமசாமி ஐயர் முதலியோர் திரு. கார்த்திகேசனுடன் சேர்ந்து கம்யூனிஸ்ட் கட்சியை வடபகுதியில் ஸ்தாபித்துப் பணியாற்றினார்கள்.

பிற்காலத்தில் புகழ்பெற்ற எழுத்தாளர்களான எஸ். பொன்னுத்துரை, கே. டானியல், டொமினிக் ஜீவா, நீர்வை பொன்னையன் ஆகியோர் இக்காலகட்டத்தில் கார்த்திகேசனின் ஆளுமைக்கு உட்பட்டார்கள்.

## ப. ஜீவானந்தத்துடன்

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களில் ஒருவரும் மாபெரும் இலக்கியவாதியுமான காலஞ்சென்ற ப. ஜீவானந்தம் 1947 ஆம் ஆண்டில் இந்தியாவில் தலைமறைவாகி யாழ்ப்பாணத்தில் கார்த்திகேசன் இல்லத்திலேயே சிலகாலம் வாழ்ந்து வந்தார்.

ஜீவா என்று அழைக்கப்படும் ப. ஜீவானந்தம் இங்கு வாழ்ந்த காலத்தில் கம்யூனிஸம் பற்றிய நூல்களை எழுதினார். அவற்றைப் பிரசுரித்து விநியோகிக்கும் பொறுப்பைக் கார்த்திகேசன் அவர்களே ஏற்றுக்கொண்டார்கள்.

ப. ஜீவானந்தம் மீது தாம் கொண்ட அன்பின் நிமித்தம் திரு. கார்த்திகேசன் தமக்குப் பிறந்த முதல் மகனுக்கு ஜீவானந்தம் என்று பெயர் சூட்டினார். இதற்கு முன் அவருக்கு இரண்டு புத்திரிகள் பிறந்திருந்தனர். அந்த ஆண்குழந்தை இறந்து போகவே அடுத்ததாகப் பிறந்த பெண் குழந்தைக்கு ஜீவஜோதி என்று அவர் பெயரிட்டார்.

கார்த்திகேசனைப் போலவே ஜீவானந்தமும் ஓர் அரிதான கம்யூனிஸ்ட். மனிதவாதியான ஜீவானந்தம் கலையுணர்வு நிரம்பப் பெற்றவர் பயில்வான் போன்ற தோற்றமும் தடித்த மீசையும்

உடைய அவருடைய உரையாடலில் அரசியலும் இலக்கியமும் அழகாக இளையோடி விளையாடும்.

ஜீவானந்தத்தைப் பற்றிச் சுவையான பல கதைகள் உண்டு. அவற்றில் அவருடைய உண்டி பற்றியும் சிலர் எடுத்துக்கூறுவார்கள்.

பிற்காலத்தில் ஒரு தடவை கார்த்திகேசன் இந்தக் கதைகளைக் கேள்விப்பட்டபோது '' நான் ஜீவாவுக்கு சரியாக உணவு கொடுத்தேனா என்று எனக்கு மிகவும் கவலையாக இருக்கின்றது '' என்று பாரதூரமாகக் கூறினார்.

*1947* ஆம் ஆண்டில் பிரிட்டிஷ் ஆட்சிக்கு எதிரான அரசாங்க ஊழியர்களின் பொது வேலை நிறுத்தம் இடம்பெற்றது. வடபகுதியில் இந்த வேலை நிறுத்தத்துக்கு ஆதரவாகத் திரு. கார்த்திகேசன் பல பணிகளைச் செய்தார்,

அதே ஆண்டில் இலங்கையின் பொதுத் தேர்தலும் நடைபெற்றது. பொன்னம்பலம் கந்தையா கம்யூனிஸ்ட் கட்சியின் அபேட்சகராகப் பருத்தித்துறைத் தொகுதியில் போட்டியிட்டார்.

இதனுடன் கம்யூனிஸ்ட் இயக்கத்தின் வரலாற்றிலே ஒரு புதிய அத்தியாயம், - தேர்தல் அத்தியாயம், பாராளுமன்றத் தேர்தல், உள்ளூராட்சித் தேர்தல் – அத்தியாயம் ஆரம்பமாகியது.

வாக்காளர்களைக் கவர்ந்திழுக்க கல்விமான்களும் பேச்சாளர்களும் அவசர தேவையாகினார்கள்.

திரு. கார்த்திகேசன் சிறந்த பேச்சாளராக கம்யூனிஸ்ட் கட்சி மேடைகளை அலங்கரிக்கத் தொடங்கினார். 1947 ஆம் ஆண்டு தொடக்கம் இறக்கும் வரையில் — 30 ஆண்டுகளாக — சுவையானதோர் மேடைப் பேச்சாளராகக் கார்த்திகேசன் திகழ்ந்தார்.

அவருடைய பேச்சின் சுவையில் அவரின் சிறிய ''கொன்னை'' கூட அழகு பெற்றது, ஐக்கிய தேசியக்கட்சி, தமிழ்க் காங்கிரஸ்

கட்சி, தமிழரசுக் கட்சி ஆகியவற்றுக்கு எதிராக அவர் நிகழ்த்திய பேச்சுகளில் கணத்துக்குக் கணம் வெளிவந்த அங்கதக் கதைகளை, நையாண்டிப் பேச்சுக்களை இன்றும் பலர் நினைவில் வைத்திருக்கிறார்கள்.

## ஆசிரியராகிய கதை

இதற்கிடையில் திரு. கார்த்திகேசன் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் ஒரு ஆசிரியராகினார். கம்யூனிஸ்டான கார்த்திகேசன் ''இந்துக் கல்லூரி'' யில் ஆசிரியர் பதவி பெற்றதே ஒரு கதையாகும்.

இந்துக் கல்லூரியில் ஆசிரியர் பதவிக்கான திரு. கார்த்திகேசனின் விண்ணப்பம் நிர்வாக சபையால் ஆராயப்பட்டது. ஒருவரைத் தவிர மற்றவர்கள் அனைவரும் அவரை ஆசிரியராகச் சேர்ப்பதை எதிர்த்தார்கள். ஆதரித்த ஒருவர் இலங்கை ராஜ்ய சபையின் (State Council) முதல் சபாநாயகரான சேர். வைத்திலிங்கம் துரைசாமி ஆவார். ஒரு கம்யூனிஸ்டை இந்துக் கல்லூரி ஒன்றில் ஆசிரியராக நியமிப்பதா என்பதே மற்றவர்களுடைய வாதமாக இருந்தது

சேர். வைத்திலிங்கம் துரைசாமி இந்தப் பிரச்சினையைத் தமது ஆன்மீக ஆலோசகருக்கு எடுத்துச் சொன்னதாகவும் அவர் உடனே, ''எடே அந்தக் கம்யூனிஸ்டை எடுங்கோடா அவன் நல்லாய்ப் படிப்பிப்பான்'' என்று கூறியதாகவும் கதையுண்டு.

இவ்வாறுதான் கம்யூனிஸ்ட் கார்த்திகேசன் — மாஸ்ரராகினார்.

யாழ். இந்துக் கல்லூரியில் கார்த்திகேசன் ஆசிரியராகப் பணிபுரிந்த கால் நூற்றாண்டுக்கும் மேலான காலத்தில் மாணவர்களின் இதயங்களை மட்டும் அல்ல; பெற்றோரின் இதயங்களையும் சக ஆசிரியர்களின் இதயங்க்ளையும், ஊழியர்களின்

இதயங்களையும், சுற்றுப்புற மக்களின் இதயங்களையும் கவர்ந்த ஓர் ஆசிரியராக விளங்கினார்.

யாழ். இந்துக் கல்லூரியில் கார்த்திகேசன் விசேஷமாக ஆங்கிலம், கணிதம் ஆகிய பாடங்களைப் போதித்தார். அவரிடம் கல்வி கற்ற ஆயிரக் கணக்கான மாணவர்கள் இன்றும் வகுப்பறையில் அவருடைய பகிடிகள் ஏற்படுத்திய கலகலப்பைக் கதை கதையாகச் சொல்லுவார்கள்.

பேச்சால் அல்லாது கூடுதலாகத் தனது வாழ்க்கையால் ஓர் ஆதர்ச கம்யூனிச ஆசிரியராக விளங்கிய கார்த்திகேசன் இந்துக் கல்லூரியில் உருவாக்கிய மாணவர் சமுதாயம் இன்று வாழ்வின் சகல துறைகளிலும் முக்கியமானவர்களாகத் திகழ்கின்றார்கள்.

மாணவர்களை வெறும் புத்தகப் பூச்சிகளாக அவர் பயிற்றுவிக்கவில்லை. ஒவ்வொரு மாணவனினதும் உள்ளார்ந்த திறமைகளைக் கண்டுபிடித்து அவற்றை வெளிக்கொணர்வதில் கார்த்திகேசன் மாஸ்ரர் ஒரு தனித்துவமான பங்காற்றலைச் செய்துள்ளார்.

இன்று உள்ளூராட்சி, உதவி ஆணையாளராகப் பணிபுரியும் திரு. சுந்தரம் டிவகலாலா, கார்த்திகேசன் மாஸ்ரரின் ஒரு சிறப்பைப் பற்றி அடிக்கடி எடுத்துக் கூறுவார்.

''பின் வாங்கிலில் உள்ள மாணவர்களை முன்னுக்குக் கொண்டுவருவதே ஒரு ஆசிரியனின் பணியாகும்.''

தமது அரசியல் கொள்கைக்கு இயைந்த கல்விக் கொள்கையையும் திரு. கார்த்திகேசன் கொண்டிருந்தார் என்பதற்கு இது ஓர் எடுத்துக்காட்டு ஆகும்.

திரு. கார்த்திகேசனின் கல்விப்பணி தாம் சார்ந்த பாடசாலை மாணவர்களுக்கு மட்டும் உரித்தானதாக இருக்கவில்லை.

விக்ரோறியா வீதி இல்லத்திலிருந்து அவர் மாறி வண்ணார்பண்ணைக் கலட்டி வீதியிலும், நாச்சிமார் கோயிலடியிலும்

வாழ்ந்தபோதும் வெளியேயுள்ள எண்ணற்ற மாணவர்கள் அவரிடம் இலவசக் கல்விப் போதனையைப் பெற்றார்கள்.

இயற்கையாகவே கார்த்திகேசன், ஆசிரியர் சங்க வேலைகளில் மும்முரமாக ஈடுபட்டார். வடமாகாண ஆசிரியர் சங்கத்தின் ஊடாக அவர் ஆசிரியர்களின் உரிமைக்காகப் போராடிய அதே வேளையில் வட மாகாணத்தில் கல்வியின் வளர்ச்சிக்கும் அரும்பாடுபட்டார். கல்விமானான கம்யூனிஸ்ட் கார்த்திகேசனை எதிரிகள் கூட மறைக்க முடியாத நிலைமை ஏற்பட்டது.

கார்த்திகேசனின் ஆசிரியர் வாழ்வில் அவர் எழுதிய இராப் போசனத்துக்குப் பிந்திய பேச்சுகளும் குறிப்பிடத்தக்கவை. அண்மைக் காலம்வரை ஆங்கிலத்தில் அமைந்த, அவர் மாணவர்களுக்காக எழுதிய பேச்சுக்களில் நகைச்சுவை நடமாடும். யாழ்ப்பாணத்தில் இத்தகைய பேச்சுக்களை எழுதி மாணவர்களுக்கு உதவுவதில் கார்த்திகேசன் தன்னிகரில்லாததோர் இடத்தை வகித்தார்.

## அரசியல் பணியும் சோதனைகளும்

கல்லூரி ஆசிரியராகியபோதும் திரு. கார்த்திகேசன் கம்யூனிஸ்ட் கட்சி வேலையை இடைவிடாது செய்துவந்தார். அக்காலத்தில் கம்யூனிஸ்டுகள் ஒவ்வொருவரும் இரகசியப் பொலிஸாரின் இடைவிடாப் பார்வைக்கு உட்பட்டார்கள். திரு. கார்த்திகேசன் தமது அரசியல் ஆவணங்களை குசினிப் பானை, சட்டிகளுக்குள் மறைத்து வைத்திருப்பார். அவருக்கு எதிராகப் பொலிஸாருக்கு முறையீடுகள் சென்றதும் உண்டு.

யாழ். இந்துக் கல்லூரி தனியார் பாடசாலையாக இருந்த' போது வெளியே அவருக்கு ஓரளவு அரசியல் சுதந்திரம் இருந்தது. 1960 இல் அரசாங்கம் பாடசாலைகளைப் பொறுப்பேற்ற போது ஆசிரியர்களும் அரசாங்க ஊழியர்களாகி அரசியல் உரிமைகளை இழந்தார்கள்.

இத்தகைய காலங்களில் திரு. கார்த்திகேசன் பல கஷ்டங்களை எதிர்நோக்கிய போதிலும் தமது கட்சி வேலைகளை முழு மூச்சுடன் செய்து வந்தார்.

இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியின் ''தேர்தல் சகாப்தம்'' 1947 இல் ஆரம்பித்தது என்று முன்னர் குறிப்பிடப்பட்டது அல்லவா?

*1956* இல் திரு. பொன்னம்பலம் கந்தையா பருத்தித்துறைத் தொகுதியின் முதலாவது கம்யூனிட்ஸ் பாராளுமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இந்தத் தேர்தல் வெற்றி தமிழ்ப் பிரதேசங்களில் இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சி பெற்ற மிக உச்சக் கட்ட வெற்றியாகும்.

இதைத் தொடர்ந்து கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்கள் பல கிராமசபைகள், நகரசபைகள், மாநகரசபைகள் ஆகியவற்றில் தேர்தலில் நின்று வெற்றியீட்டினார்கள். சில சபைகள் கம்யூனிஸ்டுகளின் கட்டுப்பாட்டின் கீழ் வந்தன. இன்னும் சிலவற்றில் கம்யூனிஸ்ட் உறுப்பினர்கள் அபரிமிதமான செல்வாக்கை வகித்தார்கள்.

## தேர்தல் வெற்றி

திரு. கார்த்திகேசனும் யாழ்ப்பாணம் மாநகரசபையின் வண்ணார்பண்ணை தேர்தல் தொகுதியின் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலத்தின் ஒரு பலத்த ஆதரவாளரான திரு. துரைராசா என்பவரை அவர் இத்தேர்தலில் தோற்கடித்தார்.

யாழ். மாநகரசபையின் ஓர் உறுப்பினராக இருந்த காலத்தில் திரு. கார்த்திகேசனின் மக்கள் சேவை மேலும் அதிகரித்தது.

# சமூக சேவை

கட்சி வேலை, ஆசிரியத் தொழில் ஆகியவற்றுடன் பரவலான சமூகசேவையும் சேர்ந்துகொண்டது.

திரு. கார்த்திகேசன் எந்நேரத்திலும், எங்கேயும் சந்தித்து உதவி பெறக்கூடிய ஒருவராகச் சாதாரண மக்களிடையே விளங்கினார். சாதாரண கடிதம் ஒன்றை எழுதுதல், விண்ணப்பப் படிவம் ஒன்றை நிரப்புதல் முதலான சகல வேலைகளையும் செய்விக்கச் சாதாரண மக்கள் திரு. கார்த்திகேசனை நாடிச் சென்றார்கள்.

வீட்டிலும், பள்ளிக்கூடம் செல்லும் பாதையிலும், திரும்பும் பாதையிலும், பள்ளிக்கூட இடைவேளைகளின் போதும் மக்கள் அவரைச் சந்தித்து உதவி பெற்றார்கள்.

அது மட்டும் அல்ல; அவரிடம் பண உதவி பெற்றவர்களின் எண்ணிக்கையும் குறைவல்ல. கார்த்திகேசன் மாஸ்ரரின் சம்பள தினத்தன்று உறவினரும், உறவினர் அல்லாதவர்களுமான பலர் பாடசாலைக்கு வெளியே பாதைகளில் காத்திருந்து பண உதவி பெற்றுச் செல்வார்கள்.

தாம் செய்யும் பணம் மற்றும் பொருளாதார உதவி பற்றி திரு. கார்த்திகேசன் ஒரு தத்துவத்தைக் கொண்டிருந்தார் — ''ஒருவர் என்னிடம் உதவியை வேண்டிநிற்கின்றார். அந்த நிலைமையில் நான் அந்த வேண்டுகோள் உண்மையானதா பொய்யானதா என்பதை ஆராய்வதில்லை. இயலுமாயின் அந்த உதவியைச் செய்து விடுகிறேன்.''

இந்தத் தத்துவம் வாழ்க்கை நடைமுறைக்கு எவ்வளவு பொருத்தமானது என்பது ஓர் ஆராய்வுக்குரிய விஷயம். ஆனால் திரு. கார்த்திகேசன் இத்தத்துவத்தின்படியே வாழ்ந்தார் என்பது மட்டும் உண்மை. இதனால் அவருக்கும் அவருடைய குடும்பத்தினருக்கும், உறவினருக்கும், நண்பர்களுக்கும் பல கஷ்டங்களும் ஏற்பட்டன.

1960 ஆம் ஆண்டில் நடைபெற்ற பொதுத் தேர்தலில் யாழ்ப்பாணத் தொகுதியில் இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியின் அபேட்சகராகப் போட்டியிட்டு ஆயிரத்துக்கு மேலான வாக்கு களைப் பெற்றார்.

இந்தத் தேர்தல்களின் போது திரு. கார்த்திகேசனுக்கு ஆதரவாக ஏழை, எளிய மக்களும், இளைஞர்களும் பிரசார வேலை செய்தார்கள்.

ஆனால் ஒரு தேர்தல் என்று வந்தால் நோட்டீஸ், சுவ ரொட்டி, அதற்கான பசை, கூட்டம், ஒலிபெருக்கி, தேர்தல் அலுவலகம், தேர்தல் பட்டியல் தயாரிப்பவர்கள், அவர்களுக் குச் சாப்பாடு, விளம்பரத்துக்குக் கார்கள் என்று பல செலவுகள் தவிர்க்க முடியாதவை.

தேர்தல்கள் திரு. கார்த்திகேசனுக்கு மீளமுடியாத பொரு ளாதார நெருக்கடிகளை ஏற்படுத்தின.

## கட்சிப் பிரிவின் போது....

அறுபதாம் ஆண்டுகளில் கம்யூனிட்ஸ் இயக்கத்தில் பாரிய தத்துவார்த்த வேற்றுமைகள் ஏற்பட்டன. ஸ்டாலினின் மறைவுக் குப் பின் ரஷ்யாவின் ஆட்சிப்பீடத்தைக் கைப்பற்றிக்கொண்ட குருசோவ் ஏகாதிபத்தியத்துடன் சமாதான சகவாழ்வு என்ற கொள்கையை முன்வைத்ததுடன் உள்நாட்டிலும் கம்யூனிஸம் அல்லாத கொள்கைகளை தொழிற்துறை, விவசாயம் ஆகியவற் றில் புகுத்தினார்.

மாசேதுங்கைத் தலைவராகக் கொண்ட சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையில் உலகக் கம்யூனிஸ்டுகள் குருசோவின் கொள்கைகளைத் ''திரிபுவாதம்'' என்று அழைத்து அதற்கு எதிராக உலகந் தழுவிய போராட்டம் ஒன்றை ஆரம்பித்தார்கள்.

உலகக் கம்யூனிஸ்ட் கட்சிகள் அனைத்தும் இந்தத் தத்து வார்த்தப் போராட்டத்தால் பிளவுபட்டன. இலங்கைக் கம்யூ னிஸ்ட் கட்சியும் இதற்கு விதிவிலக்காக இருக்கவில்லை.

டாக்டர் எஸ். ஏ. விக்ரமசிங்க, பீட்டர் கெனமன் முதலிய முதுபெரும் கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்கள் குருசேவின் திரிபுவாதக் கொள்கைகளை ஆதரித்து மாஸ்கோ - சார்புக் கம்யூனிஸ்ட் கட்சியினர் ஆகினார்கள்.

சிறந்த தொழிற்சங்கவாதியான திரு என். சண்முகதாசன் தலைமையிலான மற்றப் பிரிவினர் ''திரிபுவாதம் என்பது முதலாளித்துவமே. ரஷ்யா இன்னொரு ஏகாதிபத்திய நாடாகின்றது'' என்று கூறி பீக்கிங் - சார்புக் கம்யூனிஸ்ட் கட்சியினர் ஆகினார்கள்.

இந்தப் பிரிவின்போது திரு. கார்த்திகேசன் தானே கம்யூனிஸ்ட் கட்சியில் உறுப்பினராகச் சேர்த்த சண்முகதாசன் தலைமையிலான பிரிவினருடன் தம்மை இணைத்துக் கொண்டார்.

மக்கள் மத்தியில் மிகவும் பிரபல்யமான கம்யூனிஸ்டான கார்த்திகேசன் ''சண் கோஷ்டி'' யுடன் சேர்ந்து கொண்டது விக்ரமசிங்க - கெனமன் தலைமையிலான பிரிவைப் பெரிதும் பாதித்தது

1963 ஆம் ஆண்டில் இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சி இவ்வாறு இரண்டாகப் பிளந்தது.

இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியின் சண் பிரிவின் முக்கிய தலைவர்களில் ஒருவராகக் கார்த்திகேசன் கடமையாற்றினார்.

புதிய நிலைமையில் பாட்டாளி வர்க்கம் அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றுதல், போராட்டத்தில் வன்முறையின் பங்கு ஆகியன பற்றிய அரசியல் பிரசாரத்தில் திரு. கார்த்திகேசன் ஈடுபட்டார்.

கம்யூனிஸ்ட் கட்சி ஆரம்பிக்கப்பட்டு 20 க்கு மேலான ஆண்டுகள் கழிந்தபோதும் ''அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றுதல்'' என்ற விஷயம் இக் கட்சியால் பாரதூரமாக விவாதிக்கப்படாதது ஒரு விந்தைக்குரிய விஷயமாகும்.

மற்றது, வர்க்க அரசியல் பேசும் கம்யூனிஸ்ட் கட்சி எதிரி அதிகாரத்தைத் வெள்ளித் தட்டில் ஏந்தி வந்து கொடுப்பான் என்று எதிர்பார்த்தது இன்னொரு தவறாகும்.

புரட்சிகர வன்முறை இன்றிப் பொதுமக்களுக்குப் புது வாழ்வு ஏற்பட முடியாது என்ற மாக்சிய நெறித் தத்துவத்தைப் புதியதோர் உத்வேகத்துடன் திரு. கார்த்திகேசன் முதலிய கம்யூனிஸ்டுகள் பிரசாரம் செய்தார்கள்.

## தீண்டாமை ஒழிப்புப் போராட்டத் தலைவர்

யாழ்ப்பாணத்தில் 1966 ஆம் ஆண்டில் நடைபெற்ற தீண்டாமை ஒழிப்புப் போராட்டம் இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியின் சண் பிரிவின் தலைமையில் மேற்கூறிய தத்துவார்த்தப் பின்னணியில் நடைபெற்றது.

தாழ்த்தப்பட்ட மக்களின் கோயில் பிரவேசத்தையும் தேநீர்க் கடைப் பிரவேசத்தையும் பிரதான கருப்பொருள்களாகக் கொண்ட இப் போராட்டம் வன்முறைப் போராட்டமாக அமைந்து குறிப்பிட்ட வெற்றியையும் பெற்றது.

திரு. கார்த்திகேசன், திரு. வீ. ஏ. கந்தசாமி, திரு. ஏ. சி. இக்பால், திரு. மார்க், திரு. கே. ஏ. சுப்பிரமணியம், திரு. எஸ். ரி. நாகரத்தினம், திரு. கே. டானியல், திரு. சலிம், திரு. முத்தையா ஆகியோர் இப் போராட்டத்துக்குத் தலைமை வகித்தார்கள்.

இப்போராட்டத்தில் மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில் பிரவேசம் மிக உக்கிரமானதாகவும், மிகச் சிக்கலானதாகவும் அமைந்தது. சொத்துக்காரர், சமய ஆதிக்கக்காரர், பொலீஸ் ஆகிய சக்திகள் அனைத்தும் ஒன்று சேர்ந்து மக்களுக்கு எதிராக நின்றன.

இறுதியில் மக்கள் வென்றார்கள்.

திரு. கார்த்திகேசனைப் பொறுத்தவரையில் போராட்டம் இன்னொரு விசேஷத்தையும் கொண்டிருந்தது. தம்முடைய பல் கலைக்கழக ஆசானான திரு. சி. சுந்தரலிங்கத்துக்கு எதிராக அவர் போராடவேண்டியிருந்தது.

திரு. கார்த்திகேசன் இக்காலத்தில் தமது பேச்சாலும் எழுத் தாலும் செயலாலும் மிகப்பெரும் பங்கை ஆற்றினார்.

1963 — 1966 காலத்தில் திரு. கார்த்திகேசனுக்கு பொரு ளாதார ரீதியில் பேரிடி ஒன்று வீழ்ந்தது. அவர் அரசியல் கார ணங்களுக்காக அரசாங்கத்தால் ஆசிரியர் வேலையிலிருந்து இடை நிறுத்தம் செய்யப்பட்டார். இந்த இடைநிறுத்தம் அவருடைய முன்னாள் தோழர்களின் வேலையே என்று கூறுவார்கள். அவ ருடைய முன்னாள் மாணவர்கள் அளித்த உதவியிலேயே அவர் வாழவேண்டி நேரிட்டது.

1963 முதல் 1971 ஏப்ரல் வரை திரு. கார்த்திகேசன் கம் யூனிஸ்ட் கட்சியின் சண் பிரிவில் ஒரு முக்கிய தலைவராக விளங்கினார்.

1971 ஏப்ரல் மாத ஜே. வி. பி. கிளர்ச்சிக்குப்பின் அவர் இந்தக் கட்சியிலிருந்து பிரிந்து இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சி (மாக்சிஸ்ட்) என்ற இயக்கத்தினூடாகச் செயற்பட்டார். காலஞ்சென்ற வாட்சன் பர்னாந்து, திரு. வீ. ஏ. கந்தசாமி ஆகியோருடன் அவர் இந்தக் கட்சியின் செயலாளர்களில் ஒருவராகப் பணிபுரிந் தார்.

ஜே. வி. பி. யின் 1971 ஏப்ரல் மாதக் கிளர்ச்சி, சிறிமாவோ அரசாங்கம் கிளர்ச்சிக்காரர்களைக் கையாண்ட விதம் ஆகியன பற்றியும், இவற்றைப் பொறுத்து கம்யூனிஸ்ட் கட்சி கடைப் பிடித்த கொள்கை பற்றியும், பின்னர் உலக விவகாரங்கள் பற்றி சீனக் கம்யூனிஸ்ட் கட்சி மேற்கொண்ட மாற்றங்கள் பற் றியும், 1976 இல் மாசேதுங் இறந்ததன் பின்னர் சீனக் கம்யூ னிஸ்ட் கட்சி உள்நாட்டில் ஏற்படுத்திய மாற்றங்கள் பற்றியும் திரு. கார்த்திகேசனுக்கும் சண்முகதாசன் கட்சியினருக்குமிடையே கருத்து வேற்றுமைகள் ஏற்பட்டன.

# தமிழர் உரிமைக்காக

சுரண்டல், அடக்குமுறை ஆகியவற்றிலிருந்து முழு மனித குலமும் விடுதலை பெறவேண்டும் என்ற உன்னத நோக்குடன் கம்யூனிஸ்ட் இலட்சியத்தைக் கடைப்பிடித்த திரு. கார்த்திகேசன் இலங்கையின் ஒரு சிறுபான்மை இனமான தமிழர்கள் தமது நியாயமான உரிமைகளை இழந்திருப்பது பற்றியும் பெரும் கவனம் செலுத்தினார்.

இன ஒடுக்குமுறையும் ஒருவகை வர்க்கச் சுரண்டலே என்று நம்பிய திரு. கார்த்திகேசன் ஒரு தமிழ் இனத்தவரான கம்யூனிஸ்ட் என்ற முறையில் கம்யூனிஸ்ட் இயக்கத்துக்கு உள்ளேயும், வெளியேயும் தமிழ் மக்களின் உரிமைகளுக்காகப் போராட்டம் நடத்தினார்.

திரு. பொன்னம்பலம் கந்தையா, திரு. கார்த்திகேசன் ஆகிய தலைவர்கள் கட்சிக்குள்ளே தமிழர்களின் உரிமைகளுக்காக கம்யூனிஸ்ட் கட்சி போராட வேண்டும் என்று இடைவிடாது முயற்சி எடுத்து வந்தார்கள்.

இதன் பலனாகவே இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சி ஆரம்பத்தில் தமிழுக்கும் சிங்களத்துக்கும் சம அந்தஸ்துக் கிடைக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டை எடுத்தது; வடகிழக்கு மாகாணங்களுக்கு பிரதேச சுயாட்சி வேண்டும் என்று 1960க்கு முன்னரே வல்வெட்டித்துறை மாநாட்டில் முடிவெடுத்தது.

ஆனால் பின்னர் இக்கட்சி குருசோவ் திரிபுவாதக் கொள்கைகளை உள்வாங்கி சந்தர்ப்பவாத தேர்தல் பாதையில் இறங்கியபடியால் வகுப்புவாத நிலைப்பாட்டையே எடுக்குமளவிற்குச் சீரழிந்தது.

இந்தப் போக்கில் இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சி அறுபதாம் ஆண்டுகளிலும் பின்னரும் தொழிலாளர்களுக்கும் மற்றும் தமிழ்

மக்கள் உட்பட அடக்கி ஒடுக்கப்பட்ட மக்களுக்கும், ஈற்றில் முழு நாட்டுக்குமே துரோகம் செய்தது.

1956க்குப் பின்னர் இலங்கையில் அடிக்கடி ஏற்பட்ட இனக் கலவரங்கள் என்று அழைக்கப்படும் தமிழருக்கு எதிரான பல்வகை அட்டூழியங்களைக் கண்டு கம்யூனிஸ்ட் கார்த்திகேசனின் நெஞ்சம் வெம்பி வதங்கியது.

'இதற்கு விடிவே இல்லையா?': இக் கேள்வி அவர் மனதில் எழுந்தது.

இக் காலகட்டத்தில் அவர் வட பகுதியில் உள்ள தமிழ் இளைஞர்கள் மத்தியில் சில ஸ்தாபனங்களை உருவாக்கி தமிழ் மக்களின் உரிமைகளைப் பெற்றெடுக்க முயற்சித்தார்.

1977 ஆம் ஆண்டில் யூ. என். பி. ஆட்சிக்கு வந்தபோது ஏற்பட்ட இனக்கொலைகளை அவரே நேரடியாகக் கண்டார். அப்பொழுது ஒருநாள் அவர் கொழும்பிலிருந்து ரயில் மூலம் யாழ்ப்பாணம் திரும்பிக்கொண்டிருந்தார். அநுராதபுரத்தில் ரயில் நிறுத்தப்பட்டு காடையர்கள் உள்ளே புகுந்து "கொம்பாட்மென்றில்" இருந்த தமிழ்ப் பயணிகளை வெட்டிக் கொன்று சித்திரவதை செய்தார்கள். சில காடையர்கள் ஆசனச் சார்வுகளில் கைகளைத் தாங்கி எம்பி எழுந்து பெண்களை அடித்துத் துன்புறுத்தினார்கள்.

இந்தக் கொடுமைகளைக் கண்டு வீடு சேர்ந்த திரு. கார்த்திகேசன் அதற்குப் பின்னர் தாம் உயிருடன் வாழ்ந்த இரண்டு மூன்று மாதங்களில் சிறுபான்மை இனப்பிரச்சினை பற்றியே பலருடனும் உரையாடினார். அவர் இடைவிடாது இப் பிரச்சினை பற்றிய மாக்சிஸத் தொன்னூல்களை, குறிப்பாக ஸ்டாலின் நூல்களை வாசித்தார்.

அயராத அரசியல் வாழ்க்கையின் மத்தியில் ஆசிரியப் பணியிலும் திரு. கார்த்திகேசன் புதிய பொறுப்புக்களை ஏற்றார். அவர் யாழ். இந்துக் கல்லூரியின் அதிபராகவும், பின்னர் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியின் அதிபராகவும் இறுதியாக

பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரியின் அதிபராகவும் பணி புரிந்தார்.

## அதிபராக...

பதவி மாறியதே தவிர கார்த்திகேசன் மாஸ்ரர் முன்பு போலவே இருந்தார். அதிபர் பதவியை அவர் தன்னுடைய அன்பாலும் அறிவுரையாலும் அழகுபடுத்தினார். அவருடைய இளகிய சுபாவம் அதிபர் பதவிக்கு பொருத்தமற்றது என்று கருதியவர்கள் கூட வியக்கும் வண்ணம் அதிபர் வேலையை அவர் செய்துமுடித்தார்.

திரு. கார்த்திகேசன் அதிபராக இருந்த காலத்தில் மேற்குறிப்பிட்ட மூன்று கல்லூரிகளும் புதிய தோற்றத்தை எடுத்தன. அவர் கூடுதலான காலம் அதிபராகக் கடமையாற்றிய பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரியில் புதிய கட்டடங்களை அமைக்க அவர் முன்னின்று உழைத்தார்.

ஆசிரியப் பணியிலிருந்து ஓய்வு பெற்ற பின் திரு. கார்த்திகேசன் தமது அரசியல் பணிகளுடன் சேர்த்து பல சமூகப் பணிகளையும் மேற்கொண்டார். மரம் நடுதல், குளங்களை ஆழமாக்குதல் முதலிய சமூகநல வேலைகளைக் கூட அவர் தொடக்கி வைத்துச் செய்தார்.

இவ்வாறு மக்களின் நல்வாழ்வுக்காக வாழ்ந்த திரு. கார்த்திகேசன் 1977 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 10 ஆம் திகதி மாரடைப்பு நோயால் மரணம் அடைந்தார்.

திரு. கார்த்திகேசனின் மறைவு ஒரு நிரப்பமுடியாத இடைவெளியை ஏற்படுத்தியது. ஆதர்ச கம்யூனிய வாதியாக, தலைசிறந்த ஆசிரியராக, ஏழை பங்காளனாக, சமூக சேவகனாக, மனிதாபிமானியாக அவர் ஆற்றிய பணிகள் என்றும் மக்களால் நினைவுகூரத்தக்கவை ஆகும்.

கம்யூனிஸத்தால் கார்த்திகேசன் சிறப்புப் பெற்றாரா அல்லது கார்த்திகேசனால் கம்யூனிஸம் சிறப்புப் பெற்றதா என்ற கேள்வியைப் பலர் மனங்களிலும் எழுப்பும் வகையில் திரு. கார்த்திகேசனின் வாழ்க்கை அமைந்தது. அத்தகைய சொல்லும் செயலும் இணைந்த வாழ்க்கை அவருடையது.

மேற்குறிப்பிட்ட கேள்விக்கு நாம் ஒரு விடையைத் திரு. கார்த்திகேசனின் வாழ்க்கையில் தேடினால் கம்யூனிஸம் என்ற இலட்சியம் தான் திரு. முருகபிள்ளை கார்த்திகேசனை நாடு போற்றும் நல்லவனாக்கியது என்று கூறலாம்.

கம்யூனிஸம் என்ற இலட்சியத்துக்கும் கம்யூனிஸ்ட் கட்சிக்கும் இடையில் வித்தியாசங்கள் இருப்பதைக் கவனத்தில் எடுத்து கம்யூனிஸ்ட் கட்சி கார்த்திகேசனால் சிறப்புற்றது என்றும் கூறலாம். ★

## கார்த்திகேசன் முதலான எழுவர்

*... இக்காலத்திலேயே சீனிவாசகம் ஆயுள்வேத வைத்தியத் தொழில் ஆரம்பித்து பணிபுரிவதற்காக நாளாந்தம் யாழ். நகருக்கு வந்து சென்றார். அச்சந்தர்ப்பத்திலேயே மு. கார்த்திகேசனின் தொடர்பு சீனிவாசகத்திற்கு ஏற்படலாயிற்று. அதனால் காந்தீயவாதியாக இருந்த சீனிவாசகம் விரைவாகவே கம்யூனிஸவாதியாக மாற்றமடைந்தார். வைத்தியத் துறையுடன் தீவிர அரசியல் கருத்துகளிலும் வேலைகளிலும் தன்னை ஈடுபடுத்திக்கொள்ள ஆரம்பித்தார். யாழ்ப்பாணத்தில் கம்யூனிஸ்ட் கட்சிக்கான ஆரம்பக்குழுவில் அவரும் ஒருவராகினார். தோழர் மு. கார்த்திகேசன், சு. வே. சீனிவாசகம், ஏ. கே. கந்தையா, எம். ஏ. காதர், ராமசாமி ஐயர், எம். சி. சுப்பிரமணியம், க. மகாலிங்கம் ஆகியோரை ஆரம்ப உறுப்பினர்களாகக் கொண்டே அன்று கம்யூனிஸ்ட் கட்சி வடபகுதியில் ஆரம்பிக்கப்பட்டது.*

(''சு. வே. சீனிவாசகம் நினைவுச் சுவடுகள்'')

# குடும்ப வாழ்க்கை

திரு. கார்த்திகேசனைப் போன்ற ஒரு கம்யூனிஸ்டின் வாழ்க்கையை அரசியல் வாழ்க்கை, சமூக வாழ்க்கை, ஆசிரிய வாழ்க்கை, குடும்ப வாழ்க்கை என்று தனித்தனியாகப் பிரித்து வரையறுக்க முடியாது. அத்தகையவர்களின் வாழ்க்கையில் சகலதும் பின்னிப்பிணைந்தவையாகவே இருக்கும்.

இருப்பினும் வசதிகருதி திரு. கார்த்திகேசனின் குடும்ப வாழ்க்கை பற்றிய சில குறிப்புகளை இப்பகுதியில் தருகின்றோம்.

திரு. கார்த்திகேசன் தமது வாழ்வுமுழுவதும் பொருளாதாரரீதியில் தேவைகள் உடையவராகவே இருந்தார். இது பற்றி அவர் தமது மூத்த மகளுக்கு எழுதிய கடிதம் ஒன்றில் ''நான் எக்காலத்திலும் கையேந்தி நிற்கும் பிச்சைக்காரனாக இருக்கவில்லை. அதே வேளையில் பணம் என்னுடன் ஒட்டவும் இல்லை'' என்று குறிப்பிட்டிருந்தார்.

பொருளாதார விஷயங்களைப் பொறுத்தவரையில் அவர் ஏறக்குறைய ஒரு துறவி மனப்பான்மை உடையவராகவே இருந்தார்.

ஐந்து பெண்களைப் பெற்றவர் என்ற விஷயம் அவருடைய பொருளாதார நடவடிக்கைகளைப் பாதித்ததாகத் தெரியவில்லை.

அவருக்குச் சொந்தமாக வீடு இருக்கவில்லை; காணி நிலம் எதுவும் இருக்கவில்லை; வங்கிகளில் சேமிப்புப் பணம் இருக்கவில்லை; வசதியான வீட்டுத் தளபாடங்கள் கூட இருக்கவில்லை.

அவருடைய தரத்திலானவர்களின் பொருளாதாரத் தகைமைகளை அவர் பெற்றிருக்கவில்லை.

விக்ரோறியா வீதியில் வாடகை வீட்டில் வந்து வாழ்ந்த திரு. கார்த்திகேசன் பின்னர் வண்ணார்ப்பண்ணை கலட்டியிலும் நாச்சிமார் கோயிலடியிலும் இறுதியில் வட்டுக்கோட்டையில் தமது தங்கையாரின் வீட்டிலும் வாழ்ந்தார்.

திரு. கார்த்திகேசன் வாழ்க்கையை, வாழ்க்கையின் ஒவ்வோர் அம்சத்தையும் நேசிக்கத் தெரிந்த ஓர் அழகியல் ரசனையுள்ள மனிதன். ஆனால் அவர் தாம் கொண்ட இலட்சியத்தால் அவற்றைத் தன்னுள் அடக்கியவராகவே வாழ்ந்து மறைந்தார்.

திரு. கார்த்திகேசன் ஏழ்மையை வெறுத்தார். வீட்டில் விறகு கொத்த வரும் தொழிலாளி, நெல்லுக்குத்த வரும் பெண்மணி, இவர்கள் போன்ற பிறரும் தமது இரத்தத்தைப் பிழிந்து சொற்ப ஊதியத்தைப் பெற்றுச் செல்வதைக் காணும் போதெல்லாம் ''என்னே கொடுமை! என்னே கொடுமை!'' என்று அவர் நெஞ்சம் அழும்.

திரு. கார்த்திகேசனின் உடைகளைக் கழுவும் சலவைத் தொழிலாளி அவருடைய இளமைக்கால சகமாணவன்.

''இளமையில் எவ்வளவு கெட்டிக்காரன் அவர். ஆனால் படிக்க முடியவில்லை'' என்று அவரைப் பற்றிக் கவலைப்பட்டுப் பிள்ளைகளிடம் கூறுவார்.

விரயத்தை, ஆடம்பரத்தை திரு. கார்த்திகேசனால் சகித்துக் கொள்ள முடியாது. உடை, உணவு முதலிய எல்லா விஷயத்திலும் அவர் இந்த விதத்தில் கண்டிப்பாக இருந்தார்.

கம்யூனிஸ்ட்டான அவர் உறவினர்கள், அயலவர்கள், ஊரவர்கள் ஆகியோருடன் பழகும் போது மிகவும் தன்னடக்கமாகவும், மிகவும் மரியாதையாகவும், மிகவும் மென்மையாகவும் அவர்களின் சம்பிரதாய பூர்வமான பழக்கவழக்கங்களை மதிப்பவராகவும் நடந்துகொள்வார். பெண்கள், குழந்தைகளுடன் மிகவும் அன்பாகவும் ஆசையுடனும் உரையாடி மகிழ்வார்.

வாடகைக்கு இருந்த வீட்டுச் சொந்தக்காரருடன் அவர் எந்தக் காலத்திலும் சண்டைப்பட்டதில்லை. நாச்சிமார் கோயிலடியில் திரு. தம்பிமுத்தர் வீட்டில் 12 வருடங்களாக அவர் வாழ்ந்தார். ஆனால் ஒரு தடவை தானும் சிறிய சச்சரவுகூட அவர்களுடன் ஏற்பட்டதில்லை.

அரசியல் எதிரிகளைப் பொறுத்தவரையில் சிங்கம் போல் சிலிர்த்து நின்று போராடிய திரு. கார்த்திகேசன் பொது மக்களைப் பொறுத்தவரையில் சாதுவான பசுவாகவே திகழ்ந்தார்.

யாழ்ப்பாணத்தில் அமைந்திருந்த கார்த்திகேசனின் இல்லத்தில் எப்பொழுதும் ஆட்கள் நிறைந்தவண்ணமே இருப்பார்கள். யாழ்ப்பாணப் பட்டினத்துக்கு அலுவலாகவரும் வட்டுக்கோட்டை உறவினர் பெரும்பாலோர் கார்த்திகேசன் இல்லத்தைத் தரிசிக்காமல் செல்வதில்லை; திருமதி வாலாம்பிகை கார்த்திகேசன், அவர்களுக்கு உணவளிக்காமல் அனுப்புவதும் இல்லை

இன்னும் உறவினரின் பிள்ளைகள் பலரும் – ஆண்களும் பெண்களும் – கார்த்திகேசன் இல்லத்தில் தங்கியிருந்து படித்தார்கள். ஒரு கட்டத்தில் இத்தகையவர்களின் எண்ணிக்கை கூடியதால் திருமதி வாலாம்பிகை கார்த்திகேசன் தமது பிள்ளைகளை வேம்படி மகளிர் கல்லூரி விடுதிக்கு அனுப்பிவிட்டு மற்றவர்களை வீட்டில் வைத்துக் கவனித்தார்.

மலாயாவிலிருந்து கூட சில பிள்ளைகள் வந்து கார்த்திகேசன் இல்லத்தில் வருடக் கணக்காகத் தங்கியிருந்து கல்வி கற்றார்கள்.

கார்த்திகேசனின் குடும்ப வாழ்க்கையின் சிறப்பு அனைத்தும் அவருடைய மனைவியாரான திருமதி வாலாம்பிகை கார்த்திகேசனுக்கே உரியதாகும்.

கார்த்திகேசன் இல்லத்தில் பேதமற்ற விருந்துபசாரம் சென்றவர்களுக்கு எல்லாம் கிடைத்தது. ஆனால் பொருளாதார நிலைமையின் ஏற்ற இறக்கம் காரணமாக, ''பால் ரீ பிளெயின்ரீ'' யாக மாறுவதுண்டு.

திரு. கார்த்திகேசனின் தாயாரும் இரண்டு தங்கைமாரும் 1948 ஆம் ஆண்டு மலாயாவிலிருந்து திரும்பி வந்து ஏறக்குறைய 20 ஆண்டுகள் கார்த்திகேசன் குடும்பத்துடனேயே வாழ்ந்தார்கள்

திரு. கார்த்திகேசனுக்கு ஐந்து பெண்பிள்ளைகளும் ஒரு மகனும் பிறந்தார்கள். தீராத இளம்பிள்ளைவாத நோய்வாய்ப் பட்ட மகன் ஜெகதீசன் 1985 ஆம் ஆண்டு தனது 34 ம் வயதில் இறந்தார்.

மூத்த மகள் ராணிரத்னதேவி இலங்கைப் பல்கலைக் கழகப் பட்டதாரி ஆகி சீனாவில் பீக்கிங் அயல்மொழிப் பதிப்பகத்தில் 13 ஆண்டுகள் தமிழ்ப் பணியாற்றிய பின் இப்பொழுது சங்கானை உப அரசாங்க அதிபர் அலுவலகத்தில் திட்டமிடல் அமுலாக்கல் அதிகாரியாகப் பணிபுரிகின்றார்.

இரண்டாவது மகள் மனோரஞ்சிதம் ஒரு பயிற்றப்பட்ட விஞ்ஞான ஆசிரியை. தற்பொழுது வட்டுக்கோட்டை திருஞான சம்பந்த வித்தியாசாலையில் கடமை புரிகின்றார்.

மூன்றாவது மகள் ஜீவஜோதி அணு உயிரியலில் கலாநிதிப் பட்டம் பெற்றவர் அமெரிக்காவில் வேலை பார்க்கின்றார்.

நான்காவது மகள் ஜானகி ஒரு பொறியியலாளராய் முன்னர் தேசிய நீர்வடிகாலமைப்புச் சபையில் பணியாற் றினார். இப்பொழுது கனடாவின் ரொறொன்ரோவில் இருக் கின்றார்.

கடைசி மகள் சுமதி ஒரு பயிற்றப்பட்ட விஞ்ஞான ஆசிரியை. இப்பொழுது கண்டியில் வேலை பார்க்கின்றார்.

கார்த்திகேசன் மாஸ்ரருக்கு சீனோதயா, சிறீஉதயா, முதல்வன், ஜனாதன், சங்கீதா ஆகிய ஐந்து பேரப் பிள்ளை கள் உளர்.

திரு. கார்த்திகேசனுக்கு குடும்பத்தை நன்கு கவனிக்க நேரமும் கிடைக்கவில்லை; போதிய பணமும் இருக்கவில்லை.

ஆனால் மனைவியையும் பிள்ளைகளையும் சகோதரர்களையும் பெற்றோர்களையும் மிகவும் நேசிந்த ஒரு கணவனாக, ஒரு தந்தையாக, ஒரு சகோதரனாக, ஒரு பிள்ளையாக அவர் வாழ்ந்தார்.

மனைவியும் பிள்ளைகளும் இலங்கை திரும்பியபின் தமது தம்பியாருடன் பினாங்கில் வாழ்ந்த காத்திகேசனின் தந்தையார் முருகப்பிள்ளை 1967 ஆம் ஆண்டில் இலங்கை திரும்பி வந்து மகனுடன் சொற்பகாலம் வாழ்ந்து அதே ஆண்டு இறந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. இதையிட்டுக் கார்த்திகேசனும் பெரும் திருப்தியடைந்திருந்தார்.

திரு. கார்த்திகேசன் பூரணவாழ்க்கை வாழ்ந்த ஒரு மாமனிதன் ஆவார். அவருடைய வாழ்க்கை சிறப்புற அமைய உதவியவர் அவருடைய மனைவி திருமதி வாலாம்பிகை ஆவார். 35 ஆண்டுகளாக அவர் வீட்டுப்பாரத்தைப் பொறுப்பேற்று நடத்தினார். கிடைத்த வருமானத்தைக் கொண்டு அவர் குடும்ப நிர்வாகத்தைத் திறம்படச் செய்தார். விருந்தினர்களை உபசரித்தல், பிள்ளைகளை வளர்த்துக் கல்வி அளித்தல், நிதி நிலைமைக்கேற்ப பொருள்களை வாங்கிக் குடும்பத்தை நடத்துதல் ஆகிய அனைத்தையும் அவரே கவனித்தார்.

கம்யூனிஸ்ட் கார்த்திகேசனின் வாழ்க்கை என்று கூறும் போது அதுவே வாலாம்பிகை கார்த்திகேசனின் வாழ்வாகவும் அமைகின்றது.

★

## மாஸ்ரர் பற்றி மாணவன்

*கிராமப்புறத்திலுள்ள என்போன்ற தோட்டக் காரனின் பிள்ளைகளை மனிதர்களாக உருவாக்கி சமுதாயத்தில் தலைநிமிர்ந்து நிற்க வைத்த பேரறிஞர் மாஸ்ரர் கார்த்திகேசன்.*

*வற்றாத அன்புள்ளம் கொண்டவர் எமது ஆசான் கார்த்திகேசன்.*

— நீர்வை பொன்னையன்
(வீரகேசரி 9. 10. 1977)

ஸ்ரீ கா.
சொல் வீச்சு...

# SPIN IN SPORT
...and
# SPORT IN SPIN

Commenting in the **Ceylon Daily News** on the recent world table tennis championship, Stanley Joseph, a Sri Lanka player who took part in the Afro - Asian tournament held in Peking, said of Hsi En - ting, the present world champoin, that he uses as many as eleven kinds of spin on the ball, the puny ping - pong ball.

The earth, not so spherical, is a much larger ball. For that reason, it is not so amenable to spin. Hitherto, it had reacted only to two kinds of spin - physically, from west to east, with Japan as the land of the rising sun and politically from east to west, with the U N headquarters in New York as the modern hub of world politics.

The westward political direction prevailed for centuries with other capitals - Vienna, Paris, Geneva and London - hosting international conferences and deciding the destiny of the world. This direction was reinforced by the positions taekn by certain V. V. I. P's Till the outbreak of World War II, the President of the U. S. A. never moved out of his country, and leaders from other countries had to move westward to meet him. Also, till recently His Holiness the Pope never stirred out of the Vatican, and people in the East had to travel westward to Rome to obtain his blessings.

Of late, however, both the Pope and the President have been moving about in the world quite a lot, the former even coming down to our airport at Katunayake and the latter to places not so far from Vietnam.

But there is one leader who for more than a decade has not moved about, who seems to have decided to stay put. That is China's Chairman, Mao Tse-tung.

Consequently, for some time now, personalities and Presidents, Politicians and Prime Ministers — Nixon, Tanaka, Haile Selassie, Mrs. Bandaranaike and many others — have had to move to Peking to meet him.

That is indeed a new direction, the eastward direction, in world politics. Surprising-but not so surprising when one notes that all these leaders are only going back to the country that, with the mariner's compass, gave the world its first awakening to the sense of international direction.

Where, one might ask, was this change of political direction-no longer westward but eastward-first manifested. On a field of battle ? No. At an international conference ? No. Where then ? On a mere table at one end of which stood an American and at the other, a Chinese.

And were they armed ? Yes, they were ... fully armed ... with ping-pong racquets .. and on the ball there was spin, the other way spin !

— **M. Karthigesan**

---

*(From the Tennis Souvenir issued by the Jaffna United Club to commemorate the third test between Sri Lanka and the People's Republic of China)*

# Education: The Chettiar Does Matter

At a time when Sir Ponnambalam Ramanathan's dream of a University for Jaffna promises at long last to become reality and a minor 'battle of the sites' has developed between his twin creations, Parameshwara College and Ramanathan College, it is interesting to recall what he had to say about a sister institution, the Jaffna Hindu College. In the course of his Prize Day address in 1930 he said: "I am sure that Hindu College will last for a long time, 600 years — why not 1000 years ..."

A tall claim perhaps, tall even for formal education when the country that first gave the world the printiug press and the examination system has itself begun to question the value and validity of institutionalised education. The claim seem even taller in the purely physical sense when old buildings, cherished in memory, are crumbling before the advance of streamlsined architecture and storeyed construction.

How then did Sir Ponnambalam persuade himself to make this prediction? The provocation, or rather inspiration, was the sight of the massive pillars of the main hall at Jaffna Hindu which reminded him of those in Trirumalnayake's palace at Madurai in South India.

The question that follows naturally is: Who planned this hall and had it built? The answer, in the words

once again of Sir Ponnambalam, is "the late Pasupathy Chettiar, one of the chief founders of this great institution."

Nevertheless, to those who think of education in terms purely of pedagogic principles or pre-eminent Principals, Pasupathy Chettiar may not figure as large as Nevins Selvadurai or A. Cumaraswamy with their academic degrees and administrative acumen Their plea the conventional one, is that bricks and mortar alone do not make a school. Of course, they don't. But then, those who quote Jesus Christ on man's not living by bread alone, make the big mistake of taking the bread for granted, even of ignoring it. Bread does matter: and the finding of it, even when man is on the moon, is still a problem on earth.

So in education, bricks and mortar do matter though the mind decked in cap (mortar board) and gown does tend to dominate the scene. And so in the history of modern education in Jaffna as of national education in the entire country, ST. M.Pasupathy Chettiar (1856-1906) does matter, especially when today, with the rush for education, the buildings at Jaffna Hindu as at many other schools are threatening to burst at the seams.

If the name Pasupathy invokes 'paasam' (affection), who then, it may be asked, inspired him to all this effort for education and enlightenment? It was none other then Arumuga Navalar, the northern counterpart - if not predecessor - of Anagarika Dharmapala who so effectively fought the foreign attempt to mesmerise our minds and enslave our souls

And the irony of it is that while Arumuga Navalar had his basic education at the Jaffna Central College,

a school run by Christian missionaries his nephew Pasupathy Chettiar had his at the Chundikuli Seminary, the present St. John's College.

Pasupathy chettiar is a pillar. That this pillar doesn't appear as massive as the ones he himself created is no fault of his. It is Lanka's tha it isn't as large as India or China

**by M. Karthigesan**
Principal, Jaffna Hindu College.

## மாணவன் பற்றி மாஸ்ரர்

*"எனது மாணவர்களிற் பலர் மேலோகம் செல்வதற்காகச் சுளுவான வழியைக் கண்டு பிடித்திருக்கிறார்கள். அவர்கள் கரங்களில் தேவாரம், திருவாசகம், பைபிள் இருக்கும்.*

*அவர்களில் மாறுபட்ட படு சுட்டியான ஒரு மாணவன் மானிடவியல் சமூக விஞ்ஞானப் புத்தகங்களை வைத்துக்கொண்டு தடுமாறி னான். அவன் புரியும்படியாக விளக்கி வைத் தேன்.*

*பிறகு அவன் பூலோகத்தைப் பார்க்கத் தலைப்பட்டு விட்டான். கூடவே கம்யூனிஸ சித் தாந்தவாதியாகினான்.*

*அவர்கள் வானம்பார்த்த பூலோகவாசி யானார்கள். இவனோ பூலோகத்தைப் பார்த்த சமூக விஞ்ஞானியாகினான்.*

*அந்த மாணவன்தான் கைலாசபதி"*

(நன்றி : 93/2 சுபமங்களா)

## JAFFNA HINDU COLLEGE

Principal — Jaffna, 10 th Dec. 1969.

Mr. M. Karthigesan who is an Honours Graduate in English of the London University and who holds a diploma in Education of the Ceylon University has completed an uninterrupted period of 24 years as teacher at our College.

He has been a distinguished teacher of English Language and Literature as evidenced by the results at the public examinations and the reputation he enjoys at college and outside As a specialist in the teaching of English Language and Literature he has given of his best not only to his students but also to teachers of the subject particularly during this period of change in content and methods of teaching. As Head of the Department of English at College, he commands the esteem and confidence of his colleagues. He is at present functioning as Sectional Head of Language and Religion in the New Organization of Schools by the Ministry of Education.

Besides classroom work and academic pursuits he takes a leading role in many an extra mural activity- Sports and Games. The College Magazine, The A/L Students' Union and the Teachers' Guild. As a popular House Master, and member of the Board of Discipline his contribution In putting forward the students' point of view has been remarkable.

He reads widely, speaks both in English and Tamil effectively and writes with ease and elegance. There's hardly any happening at College where his guiding voice and pen have not been put to proper use.

Suave in manners, helpful and dependable in his ways, he has been a great acquisition to the College He bears a good moral Character.

( Signed )
**N Sabaratnam,**
Principal.

~~~~~~~~

**S. Sivapathasundram M. A ( Cantab)**
Principal

**Vaidyeshwara Vidyalaya**
Jaffna, 10 th December 1969

I met Mr. M. Karthigesan first as a student in my tutorial group when I was for a time a visiting lecturer in English at the Ceylon University College. I found him so good, that I decided that he deserved the best guidance available and I got him transferred to Prof. Ludowyke's group.

I have now known Karthigesan as a fellow teacher and a friend for over twenty five years He is one of the best.

He has been taught how to read and he reads widely. He writes intelligently and with ease. He teaches most aeceptably and is loved by his students.

His sense of hunour invariably gets the better of the almost ascetic discipline of his life, and he is very lovable company

( Signed )
**S. Sivapathasundran.**
Principal.
~~~~~~~~

# மக்கள் நெஞ்சில் வாழ்வார்
# எங்கள் "காத்தார்"

**சுந்தரம் டிவகலால,**
தலைவர்,
பழைய மாணவர் சங்கம்,
யாழ். இந்துக்கல்லூரி.

என்னை வழிப்படுத்தி சமூகத்தைச் சரியாகப் பார்ப்பதற்கு நெறிப்படுத்திய ஆசான் கார்த்திகேசன் அவர்களைப் பற்றி எனது கருத்துக்களை வடிக்க முனைகின்றேன். பிரபல சிறுகதை எழுத்தாளர் ஜெயகாந்தன் ஒரு முறை படைப்புப் பற்றிக் கருத்துத் தெரிவித்தபோது, ஒவ்வொரு மனிதனையும் அசாதாரண புருஷனாக அல்லது அதீத புருஷனாக அல்லது அதி கேவலமான புருஷனாகப் படைப்பது மிகச்சுலபம் என்றும்—அவனை அவனாகவே படைப்பது மிகக்கஷ்டமானது என்றும் கூறியது நினைவில் உண்டு.

காத்தார் என்ற அந்த மானிடனை எனது இக்கட்டுரை எவ்வளவு தூரம் சரியாகப் படம்பிடித்துக் காட்டுமோ என ஐயப்படுகின்றேன்.

எனது படப்பிடிப்பு பிழையாக அமைந்துவிட்டால் அது அம் மனிதனை மற்றவர்கள் பிழையாகப் புரிந்துகொள்ள அடிகோலுமோ என்ற பயத்துடனேயே இதனை ஆரம்பிக்கின்றேன்.

திரு. மு. கார்த்திகேசன் அவர்களைப்பற்றி எழுதுகின்றபோது 1952 ஆம் ஆண்டு ஞாபகம் வருகின்றது. இம் மாவட்டத்திலே மிகவும் பின்தங்கிய வல்வெட்டி என்ற கிராமத்திலிருந்து சாத்திரி

யாரான எனது தகப்பனார் என்னை யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் கல்வி கற்பிப்பதற்காக பட்டணம் அழைத்து வந்தார்.

வல்வெட்டிப்பள்ளிக்கூடத்தில் ஆசிரியர்களை நாம் ''வாத்தியார்'' என்றே அழைப்போம்.

சலம் கழிக்க வெளியே செல்ல வேண்டுமானால் ''வாத்தியார் ஒண்டுக்குப் போப்போறன்'' என்றே கேட்போம்.

இச்சூழ்நிலையில் இருந்து வந்த நான் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் சேரும் நாள் அன்று, எனது தந்தையாரோடு அங்கு சென்றேன்.

எனது தந்தையார் நெடிய, மெலிவான உருவம் படைத்தவர். நாலுமுழ வேட்டியோடு தோளிலொரு சால்வையும் அணிந்திருப்பார். கல்லூரிக்குள் நுழைந்து அவர் கூனிக்குறுகி சால்வையை எடுத்து அரையில் கட்டியிருந்தார்.

நான் புதிதாக வேண்டித்தந்த அரைக் காற்சட்டையும் சேட்டும் அணிந்து இருந்தேன்.

சேட் பொக்கற்றில் நான் முதன் முதலாகக் கண்ட 'பவுண்டின்' பேனா வைத்திருந்தேன். என்னைப் போன்ற பல மாணவர்கள் அங்கு வந்திருந்தார்கள்.

அவர்கள் நாகரீகம் படைத்தவர்களாக அவர்களுடைய தந்தையர் உயர்நிலையில் இருந்தவர்களாக எனக்குப்பட்டது.

அதிபர் காரியாலயத்திற்கு அருகில் ஓர் ஆசிரியர் அழகாக உடுத்த நிலையில் புதிய மாணவர்களைப் பெயர் சொல்லி அழைத்து விவரம் கேட்டுக் கொண்டிருந்தார். எனது முறை வந்ததும் அவர் என்னைஅழைத்தபோது நான் ''ஓம் வாத்தியார்'' என்று கூறினேன்.

அருகிலிருந்த, மாணவர்களும் அவர்களின் பெற்றோரும் ''கொல்'' லென்று சிரித்தார்கள்.

இதுதான் எனது யாழ். இந்துக் கல்லூரியில் உட்பிரவேச முதல் நாள் ஆகும்.

# முதல் இணைப்பு

அன்று தகப்பனார் தலையாளியில் உள்ள ஒருவரின் வீட்டுக்கு என்னை அழைத்துச் சென்றார். ''மாஸ்ரர்'' உவன் தான் எனது பிள்ளை. ''கிண்டுக் கொலிச்சிலே'' இன்று தான் சேர்த்துள்ளேன். இவனை நீங்கள் தான் பார்த்துக் கொள்ளவேண்டும்'' என்று கூறினார்.

ஒரு நெடிய உருவம்; சாரத்தோடு சேட் அணிந்திருந்தது. அவரைக் கண்டதும் ஒருவிதப்பாச உணர்வு — ஏனோ தெரியவில்லை — என் மனதில் ஏற்பட்டது.

அவரை நான் இதற்கு முன்னர் கண்டதும்இல்லை; கேள்விப்பட்டதும் இல்லை. அவர் எனது தோளில் தட்டி ''நல்லாகப் படிப்பான், நீங்கள் யோசிக்க வேண்டாம்'' என்று கூறினார்.

இதுதான் காத்தாருக்கும் எனக்கும் இடையில் ஏற்பட்ட முதலாவது இணைப்பாகும்.

அது காலவோட்டத்திலே மென்மேலும் இறுகி ஒரு பாசம், பந்தமாகவே அமைந்திருந்தது.

அதன் பின்னர் சில நாட்களில் மாலை வேளைகளில் அவர் வீட்டுக்குச் சென்று ஆங்கிலமும் கணிதமும் நான்படித்தேன். இக்காலப்பகுதியில் அவருடைய ஒவ்வொரு செயலும் என் மனதில் ஆழமாகப பதிந்தன.

# தனித்துவமான பண்பு

அவரது மனிதப்பண்பும் மனித நேயமும் அவரை ஏனைய ஆசிரியர்களிடமிருந்து பிரித்துப்பார்க்க என்னைத் தூண்டின.

நான் எட்டாம் வகுப்பை எட்டியதும் கார்த்திகேசன் மாஸ்ரர் ஒருநாள், ''இன்றைக்குப் பின்னேரம் ரவுணிலை இருக்கிற பூபாலசிங்கம் கடைக்கு வா'' என்று எனக்குச் சொன்னார்.

நான் அங்கே சென்றதும் சில புத்தகங்களைத் தனது செலவில் என்னை வாங்கும்படி கூறினார்.

இது பல்கலைக்கழகம் செல்லும் வரை தொடர்ந்தது தனது சம்பளத்தன்று ஒருதொகை பணத்தை எனக்கு அறிவுப்பசியைத் தூண்டவும் மானிட நேயத்தை வளர்க்கவும் மாக்சிஸத்தைப் படிக்கவும் அவர் செலவு செய்தார்.

யாழ். இந்துக்கல்லூரியின் ஆசிரியர் என்ற முறையில் நான் நேரடியாக அவரின் மாணவன க இருந்ததில்லை. எனது ஆறாம் வகுப்பில் அவர் ஆங்கில ஆசிரியராகவும், பல்கலைக்கழக புகுமுக வகுப்பில் ஆங்கில ஆசிரியராகவும் மட்டுமே இருந்தார்.

அவருக்கும், எனக்கும் இருந்த தொடர்பு பல துறைகளிலும் வளர்ந்து வந்தது. என்னை வளப்படுத்துவதில், நெறிப்படுத்து வதில் அவர் மிகக்கவனமாக இருந்தார்.

யாழ். இந்துக் கல்லூரியில் நான் படித்த காலத்தில் அவர் அரசியலில் ஈடுபட்டு இருந்ததை நான் அறிவேன். யாழ். மாநகர சபையின் தேர்தல்களில் அவர் ஈடுபட்டார். கலட்டியில் நான் இருந்த வீட்டுப்பகுதிக்குரிய வட்டாரத்தில் அவர் போட்டியிட் டார். தேர்தல் பிரசாரத்துக்காக அவர் வீடுவீடாகச் சென்றார். அவரின் பின்னால் ஒவ்வொரு பொடியும் திரியும். அப்பட்டா ளங்கள் சின்னக் குஞ்சுகள்; அவரை எதிர்த்து போட்டியிட்ட வர்களின் பின்னால் எல்லா விதமான பலமும் இருக்கும்.

அவரோ அன்பால், பண்பால், மனிதநேயத்தால் வாக்குக ளைப்பெற முனைவார். பலமுறை போட்டியிட்டார் ஒரு முறை வென்றார். அவர் வென்ற சமயம் அவரின் பிரசாரக் குழுவில் நானும் இடம்பெற்றிருந்தேன். இச்சந்தர்ப்பங்களில் லேக்வியூ ஹொட்டேலுக்கு ''பிளேன்றி'' வாங்கித்தர எங்களை காத்தார் அழைத்துச் செல்வார்.

## பழைய சைக்கிள் கதை

அவருடைய சொகுசான வாகனம் பழைய சைக்கிளே. அந்த சைக்கிளின் கிழிந்து போன ''சீற்'' பல்வேறு சந்தர்ப்பங்களில் நடுத்தெருவிலேயே கடிதம் எழுதும் மேசையாக மாறியிருக்கின் றது.

ஆம் காத்தாரை யாரும் எப்பவும் எந்தவிடத்திலும் மறித்து உதவி கேட்டால், அவரை அறியாமல் சையிற் பொக்கற்றுக்குள் அவர் கை பேனாவைத் தேடும்.

ஒரு நாள் பூட்டில்லாத சைக்கிளை வெளியே நிறுத்திவிட்டு இரவு பதினொரு மணிபோல லேக்வியூ ஹோட்டலுக்குள் பளேன்ரி அடிக்க சென்றநாம் திரும்பி வந்து பார்த்தபோது அச்சைக்கிளைக் காணவில்லை. இளைஞர்களாகிய நாம் கொதித்தோம்.

அப்போது காத்தார் ''பரவாயில்லை, பரவாயில்லை அந்த இரும்பும் என்னிலும் பார்க்க ஏழை யாருக்கோ தேவைப்பட்டது. நாங்கள் போவோம்'' என்று எம்மை சமாதானப்படுத்தினார். 1963 ஆம் ஆண்டு நான் பல்கலைக் கழகம் சென்றேன். அதன் பின்னர் காத்தாருடைய புத்தி ஜீவித்தன்மையை நான் ஓரளவிற்கு அறியக்கூடியதாக இருந்தது. 1968 ஆம் ஆண்டு நான் இலங்கை நிர்வாக சேவையில் சேர்வதற்கு என்னைத் தயார்செய்ய அவரிடம் மீண்டும் படிக்கச் சென்றேன். நான் நிர்வாக சேவையில் சேரவேண்டும் என்பதில் அவர் மிகவும் அக்கறையோடு இருந்தார்.

பின் வாங்கிலில் இருக்கும் மாணவன் ஒருவனை முன் வாங்கிலுக்குக் கொண்டு வருவதே ஆசிரியன் ஒருவனின் பணி என்று அவர் சந்தர்ப்பம் கிடைக்கும் போதெல்லாம் கூறுவார்.

## மாஸ்ரரின் உபதேசம்

அதேபோன்று நிர்வாக சேவையில் சேர்ந்ததும் அவர் எனக்கு பின்வருமாறு எழுதினார்: ''சாதாரண பட்டதாரியாகிய நீ, சமூகத்தால் மதிக்கப்படாத நீ, இன்று சமூகத்தின் பார்வைக்கு ஆளாகியுள்ளாய். உனது சேவைக்காலத்தில் வாழ்க்கையில் பின் தங்கி நிற்கிற மக்களை முன்னுக்குக் கொண்டுவர உன்னாலானதைச் செய்யவேண்டும்.''

கடந்த 24 ஆண்டுகால எனது நிர்வாக சேவையிலே நான் படித்த சட்டங்கள், முகாமைத்துவ நூல்கள், பலதரப்பட்ட புத்தகங்கள், சுற்று நிருபங்கள் இவை எல்லாவற்றையும் விட கார்த்திகேசன் மாஸ்ரரின் உபதேசத்தையே நான் தாரக மந்திரமாகக் கொண்டு கடமையாற்றி வருகிறேன்.

''காத்தார்'' ஆசிரியராக இருந்த காலத்தில் அவருடைய அரசியல் சிந்தனையை ஏற்றுக்கொண்ட மாணவர்களிலும் பார்க்க எதிர்த்த மாணவரே அதிகமாகும். ஆனால் எதிர்த்தவர்களும் கூட ''காத்தாருடைய மனித நேசிப்பு, பண்பு ஆகியவற்றின் ஈர்ப்பிலிருந்து தம்மை விலக்கிக்கொள்ள முடியவில்லை''.

ஆசிரியர்கள் மாணவர்களுக்கு அறிவு ஊட்டுபவர்கள். ஆனால் எல்லா ஆசிரியர்களாலும் மனிதநேயம் கொண்டவர்களை உருவாக்குவது கடினம்.

''காத்தார்'' தமது செயலால், வாழ்க்கை முறையால், நகைச்சுவைப் பேச்சால் மனிதநேயம் கொண்ட பலரை உருவாக்கினார்.

காத்தார் கல்வியில் மிகவும் அக்கறை காட்டினார். இவ்வகையில் யாழ். பல்கலைக்கழகத்தை, பலம் வாய்ந்த பலரின் எதிர்ப்பின் மத்தியில் உருவாக்குவதில் காத்தாரும் அவருடைய தோழர்களும் வகித்த தூரதிருஷ்டி மிக்க பங்கு நினைவிற்கொள்ளத்தக்கது.

## வாழ்ந்து காட்டிய கம்யூனிஸ்ட்

''காத்தார்'' வாழ்ந்து காட்டிய ஒரு கம்யூனிஸ்ட் ஆவார். இன்றும் எம்மில் பலர் அவரின் பகிடிகளை நினைத்து நினைத்து சிரிப்போம், சிந்திப்போம்.

துரதிருஷ்டவசமாகக் ''காத்தாரை'' அக்காலச் செக்கு மாட்டுச் சிந்தனை கொண்ட அரசும், சம்பிரதாய சமுதாயமும் புரிந்து கொள்ளவில்லை.

அவர் ஒரு அரசவிரோதி என அக்கால ''சோஷலிச'' அரசு அவர் வீட்டைச் சோதனையிட்டதை நாம் அறிவோம்.

யாழ். இந்துக் கல்லூரியின் அதிபராக சில மாதங்கள் மட்டுமே அவரால் இருக்க முடிந்தது என்று கூறுவதிலும் பார்க்க சில மாதங்கள் மட்டுமே இருக்கவிட்டார்கள் என்று சொல்வதே பொருத்தமானதாகும்.

''காத்தாரைப்'' போன்ற ஒருவரைக் காண்பதற்கு நாம் இன்று ஆசைப்பட வேண்டும். அவர் சிலையில் எழுத்து; சிந்தையில் நீங்காத உயிர் ஓவியம். மக்கள் நெஞ்சில், மனிதநேயம் கொண்டோர் நெஞ்சில் காத்தார் என்றும் வாழ்வார்.

''His Life Was His Message'' ★

# நகைச்சுவை மன்னன் கார்த்திகேயன்

— தி. சிறீனிவாசன்.

'அழகிய பொருளால் என்றும் அடைவது ஆனந்தமே' என்று ஆங்கிலக் கவிஞர் கீட்ஸ் அருளிப் போந்தார்.

'எக்குடிப்பிறப்பினும் யாவரே ஆயினும் அறிவினை விரும்புவோர் அனைவரும் வருக' என்று அருள் கூர்ந்து அழைத்திடுந் தெய்வம் அறிவுத் தெய்வமேயன்றோ.

யாழ். இந்துக் கல்லூரியில் சுமார் 26 வருடங்களாக ஆசிரியராகவும், சில காலம் அதிபராகவும் பணிபுரிந்த கார்த்திகேயன் 'மாஸ்டர்' மறைந்து இன்று ஒன்பது வருடங்கள் முடிவடைந்தன. அவர் தொட்ட துறைகள் அனைத்தும் துலங்கின. என்றாலும், ஆசிரியராக, இலக்கியப் பேராசானாக ஆற்றிய சேவை இக்கல்லூரியில் மட்டுமல்ல யாழ்ப்பாணச் சமூகத்திலேயே ஒரு தனித்துவம் பெற்றிருக்கிறது.

கலை நலமறியாது வருந்தும் மக்களுக்கு எழுத்தறிவிக்கும் அறம் ஏனைய அறங்களிலும் நூறாயிரம் மடங்கு மேலானதென்று பாரதியார் குறிப்பிட்டது போல பெரும் பதவிகளுக்கு, பேராசிரியராக இருக்கவல்ல தகைமையுடைய கார்த்திகேயன் கல்லூரி மாணவர்களுக்கு இலக்கியம் கற்பிப்பதில் இன்பங் கண்டார். அது அறிவினை வளர்க்கும் இலக்கியமாகவும், அதன் இரசனை இலட்சிய நோக்குடையதாகவுமிருந்ததால் அவருடைய நாமம் மாணவரது மனதில் என்றும் வாழ்கின்றது.

எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும் என்ற உண்மை, கார்த்திகேயன் கொழும்பு பல்கலைக்கழகக் கல்லூரியின் பட்டப் படிப்புக்கு சவாலாயிருந்தது. இலக்கியத்திலும் கணிதத்திலும் சரிநிகரான திறமைவாய்ந்திருந்ததால், கணிதத்திலா அல்லது ஆங்கிலத்திலா விசேட (Honours) படிப்பை தொடர்வது? இந்த நாடு கண்ட மிகச்சிறந்த ஆங்கிலப் பேராசிரியர் E.F.C லூடோவைக் இவருடைய இலக்கியத் திறனாய்வின் திறமையை

மெச்சியதால், 'கணிதம் தமிழனுக்கு கைதேர்ந்த துறையானதால் ஆங்கிலத்தில் உங்கள் கைவண்ணத்தைக் காட்டுங்கள்' என்றார்கள் கணிதப் பேராசிரியர்கள்.

பட்டப் படிப்பின் போதே 'பொது மக்கள் சேவை' என்ற பித்துப் பிடித்ததால் அவர் சித்தியடைந்த இலண்டன் B.A. English Honours பரீட்சையில் முதன்மை பெறவில்லை; அதைப் பற்றி அவர் கவலைப்படவுமில்லை.

யாழ். இந்து மாணவரின் நற்றவம் அவர் கால் நூற்றாண்டு காலமாக ஆங்கிலம், ஆங்கில இலக்கியம், கணிதம் என்ற பாடங்கள் மூலம் பல்லாயிரக் கணக்கான மாணவர்களை நன்னெறிப் படுத்தினார்.

## நகைச்சுவையான ஆங்கில வகுப்புகள்

ஆங்கில இலக்கியம் என்றால் அவருடைய வகுப்பு நகைச்சுவை ததும்பியவண்ணமிருக்கும். கீழ் மட்டத்திலுள்ளவனை மேலே கொண்டுவர வேண்டுமென்ற பெருநோக்கமே அவருடைய ஆசிரிய, அரசியற் சமூகப் பணிகளில் முன்னின்றது.

இளம் பராயத்தை மலேசியாவில் செலவிட்ட ஆசிரியர், ஒரு சிறந்த நியாயவாதியாகவேண்டுமென்பதே அவருடைய தந்தையாரின் விருப்பமாகவிருந்தது. ஆனால் மைந்தனோ பொதுத் தொண்டு என்பதில் அசையாத நாட்டம் கொண்டார்

என்னைப் போல அவரிடம் கல்வி கற்றவர்கள் ஆங்கிலத்தில். அது அளிக்கும் பரந்த ஆழமான அறிவில், அதனை நகைச்சுவையுடன் ஊட்டும் திறமை என்பவற்றில் அவருக்கு நிகரான எவரையும் காணமாட்டார்கள்.

கார்த்தியின் நகைச்சுவை – யாழ். இந்துவின் காவியம் – இன்று உலகெல்லாம் பரவியிருக்கிறது.

அலாதியான முறையில் ஆங்கிலம் கற்பித்த ஆசிரியர் 'Hiccup' என்றால் 'விக்கல்' எடுக்கவில்லையா என்பார். 'Yawn'

என்று இலேசாக வாயைத்திறந்து கொட்டாவி விடுவதை நீங்கள் காணவில்லையா என்பதில்; உச்சரிப்பில், பாவை வாசிக்கும் பண்பில் அதன் தாற்பரியம் தெளிவாகும்.

கணிதத்திலும் இலக்கியத்திலும் தெளிவாகச் சிந்திக்கவும், உணர்வை சொற்கள் மூலம் இனங்காணவும் வழிகாட்டுவதில் 'கார்த்தி' ஒரு சமர்த்தன்.

'Trumpet Major' என்ற ஆங்கில நாவலை இரண்டாம் உலக யுத்த காலத்தில் எங்களுக்குப் படிப்பித்தார். அதில் வரும் அழகி 'ஆன்' பற்றி நாவலாசிரியர் 'Her mouth was clearly cut and yet not classical' என்று கூறுகிறார். மாணவர்களுக்கு இது புரியாத நிலையில் ஆசிரியர் கொடுத்த விளக்கம் ''அவளுடைய வாய் அழகாக இருந்தபோதும் காப்பியங்கள் கூறும் சிறப்பு அதற்கு இல்லை'' என்றார்.

அதே நாவலில் ஒரு வசனம் ''in those days of high wasted Muslin gowned women when a vast army ravag--ing the country was a cause of much trembling to the sex'' மாஸ்ரரின் நகைச்சுவைக்குப் பணிந்தது. 1946ஆம் ஆண்டு நடந்த ஆங்கில இலக்கிய வகுப்பு. ஏன் நாரிக்குமேல் முஸ்லிம் பெண்கள் கவுனை உடுத்தவேண்டுமென்பது மாணவர் கேள்வி. ''உங்களுக்குத் தெரியாதோ பெண்டுகள் வீட்டு வேலிகளைச் சண்டைக்காலத்தில் ஏன் உயர்த்திக் கட்டியவர்கள் என்பது, வேலியில் சிறு பொட்டுகள் வேறுவிடயம்'' என்றார் மாஸ்ரர். மறக்கமுடியாத விளக்கம்.

## கன்னாதிட்டி பூப்பறிப்பேன்

பாடத்திலிருக்கும் கரிசனை மாணவனுக்காகவென்பதை நாமென்றும் காணமுடிந்தது அக்காலத்தில் பாடப்பட்ட சினிமா-மெட்டு ''வாசமுள்ள பூப்பறிப்பேன் என் கண்ணாட்டிக்கு ஆசையோடு நான் கொடுப்பேன்'' ஆசிரியர் அறிந்திருந்தார். கன்னாதிட்டியிலிருந்து வரும் ஒரு மாணவன் சில நாட்கள் கல்லூரிக்கு வரவில்லை. ஏன் வரவில்லையென்று கேட்டார். ''சேர் இவர் மாமியார் வீட்டுக்குப் போயிருந்தார்'' என்று

சில மாணவர்கள் சொன்னார்கள். அதற்கு ஆசிரியர் ''என்ன கன்னாதிட்டி பூப்பறிப்பேன் என் கண்ணாட்டிக்கு ஆசையோடு நான் கொடுப்பேன் என்று நின்று விட்டாயோ?'' என்றார்.

## A. B. C. D, A. R. P.

ஆசிரியர் நல்ல அவதானி. மாட்டு வண்டியில் வண்டிக்காரனுக்குப் பக்கத்திலிருந்து வரும் மாணவன் ஒருநாள் தனியே தானே வண்டியை ஓட்டி வந்தான். அவனை வகுப்பில் கண்டதும் ''எழும்பு தம்பி A. B. C. D'' என்றார். விளங்காது விழித்த மாணவனுக்கு ''நீயொரு Assistant Bullock Cart Driver'' என்றார்.

ஆகாயத் தாக்குதல் பாதுகாப்பிற்கு A. R. P என்பது சருக்கம். இன்னொருநாள் ஒரு மாணவனைப் பார்த்து ஆசிரியர் ''நீ என்ன A. R. Pயில் இருந்தாயோ?'' என்றார். ஒருவருக்கும் புரியவில்லை. மாணவனுடைய தலைவிறுத்தம் அரைறாத்தல் றோஸ்ட் பாண் போன்றதாம்.

## தாயின் சணற்கொடி

''தாயின் மணிக்கொடி'' என்று பாடிய பாரதியார் இன்று இருந்தால் ''தாயின் சணற்கொடி பாரீர்'' என்று பாடியிருப்பார் என்றார். காரணம் வறுமையில் உழலும் தாய்மார் பொற்றாலிக்குப் பதிலாக மஞ்சற் கயிற்றை அணிகின்றனர் என்று விளக்கமளித்தார்.

## விதானை ஒரு வித-ஆனை

ஆசிரியரின் வகுப்பொன்றில் கற்ற மாணவன் ஒரு விதானையாரின் மகன். விதானையார் ஆசிரியரின் உறவினர். மாணவனை வகுப்புக்கு அறிமுகஞ்செய்த ஆசிரியர் மிகப் பருமனான மாணவனான அவனை ''இவர் ஒரு விதானையின் மகன். ஆனால் இவரும் ஒருவித...... ஆனை'' என்றதும் சிரிப்பொலி சில நிமிடம் நிலவியது.

## இடப்பெயர் ஆராய்ச்சி

பொழுதுபோக்குக்கு மாணவர்களுடன் இடப்பெயர்கள் பற்றி ஆலோசனை நடத்துவார். நாயன்மார்கட்டு இன்று நாயம்மாகட்டு என்று திரிந்து விட்டது. அதன் விளக்கம் - ஒரு தாய் பிள்ளைக்கு உணவூட்டிக் கொண்டிருந்தபோது வழிப்போக்கன் இடத்தின் பெயரைக் கேட்டான். விடையளிக்குமுன் வீட்டு நாய்

குரைக்க பிள்ளை சத்தமிட்டு ''நாய் அம்மா கட்டு'' என்றது. வழிப்போக்கனும் அது நாயம்மாகட்டு என அறிந்துகொண்டான்.

புன்னாலைக்கட்டுவன் — விடியற்காலையில் தோட்டங்களில் தோட்டக்காரர் பின்னால் கச்சை கட்டுவதால் அது பின்னாலை கட்டுவான் எனப்பட்டதும் பின்னர்அது மருவி புன்னாலைக்கட்டு வனானதும் அவருடைய வியாக்கியானம்.

## கடைசி அடி

ஒரு முறை தெருவோரமாக இருந்த வகுப்பறையில் கற்பித்துக்கொண்டிருக்கும் சமயம் அவ்வீதியில் ஒரு பிரேத ஊர்வலம் சென்றுகொண்டிருந்தது. வகுப்பறையை ஊர்வலம் அண்மித்ததும், பறையோசை வெடியோசை வகுப்பைக் குழப்பியது. ஆசிரியர் மௌனியானார். பின்னர் அவர் சொன்னார்? ''கடைசி அடி அடித்துப் பார்க்கினம் ஆளை எழுப்பிப்போடலாமென்று''

பொதுவுடைமைத் தத்துவத்தை நன்றாய்க் கரைத்துக்குடித்தவர் கார்த்திகேயன். உலகம் உய்வதற்கு அதுவே சிறந்த அரசியல் தத்துவம் என்ற அசையாத நம்பிக்கை கொண்டவர். ஆனால் அரசியல் எதுவும் அவருடைய ஆசிரிய பணியில் எள்ளளவும் இடம்பெறவில்லை. பாடசாலை வைபவங்களில் இராப்போசன விருந்தில் அவருடைய சொல்லோவியங்கள், நகைச்சுவைகள் ஆழ்ந்த கருத்துக்களை அள்ளிவீசும்.

## வால்பிடி மந்திரி

ஐ. தே. கட்சி வால்பிடி மந்திரி என நினைத்து மீன்பிடி மந்திரிப் பதவியை வழங்கியதா என்றும் அதே கட்சி இன்னொரு அமைச்சருக்கு ''லோக்கல் கவுன்மன்ட்'' (இளக்கமான) துறையைக் கொடுத்ததும் வெந்த புண்ணில் வேல் பாய்ந்த மாதிரி எங்கள் திருச்செல்வம் அவர்களை தெருச்செல்வமாக்கிவிட்டதே என்ற கண்டனங்களை செவிநயமாகக் கொடுப்பார்.

யாழ். இந்து அதிபராகச் சில காலம் கடமையாற்றிய நகைச்சுவை அரசன் கார்த்திகேயன். கிழக்கும் மேற்குமுள்ள கல்லூரிகளுக்கு சடுதியாக மாற்றம் பெற்றபோது, தான் 'கார்த்திகேயன், அல்ல, ஒற்றைக் காலில் நின்றாடும் தாண்டவ தெய்வம்' என்றார்.

## Road master

பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி பிரியாவிடையில் ஒரு 'Road Master' சைக்கிளை மாஸ்ரருக்கு அன்பளிப்புச் செய்தனர்.

அதற்குப் பதிலளித்துப் பேசியபோது ''நான் இதுவரை School Master தொண்டு செய்தேன். நீங்கள் சமூகத்தொண்டு தொடர வேண்டும் என்பதற்காக என்னை ஒரு Road Master ஆக்கி அதற்கேற்ற சாதனத்தையும் வழங்கி விட்டீர்கள், நன்றி'' என்றார்.

திரு. கார்த்கேசனின் மாணவர்கள் இன்று எல்லா நாடுகளிலும் மிகச்சிறந்து விளங்குகின்றனர்.

பல்கலைக்கழகத் துறையில் பேராசிரியர்கள் தனஞ்செயராசசிங்கம், கைலாசபதி, சோ. செல்வநாயகம் குறிப்பிடத்தக்கவர்கள்.

கணிதமேதையான பழைய மாணவன் பேராசிரியர் கனகசபாபதி புள்ளியியலுடன் சைவசித்தாந்தத்தைக் கலந்து முருகன் கோவிலை பேராதனையில் அமைத்திருக்கின்றார். பேராதனை வேல் ஒரு காலத்தில் சைவசித்தாந்த வாழ்வுக்கு வளமளிக்கும் என்பர்.

## 'ஓம்'மும் 'மாஓ'-வும்

பேராசிரியர் கைலாசபதி சைவசிந்தாந்தத்தின் ''ஓம்'' என்ற தத்துவத்தை சீனக் கம்யூனிஸ்ட் தலைவர் மாஓவில் உரைத்துப் பார்க்கிறார். ஓம் மாஓ எது முந்தியது என்பதல்ல கேள்வி. இரண்டும் ஒன்றென்பது முக்கியம் என்பர்.

'' சிங்கி '' என்று பேராசிரியர் தனஞ்செயராசசிங்கத்தை அழைக்கும்போது ''You have lost all that is on your head but all that is best is inside '' என்பார்.

அதற்கு ''சிங்கி,'' தலையில் மருந்தெண்ணையை வைக்க முதுகில் ரோமம் வளர்கிறது என்றார். அதற்கு ஆசிரியர் அப்ப முதுகில் தடவிப்பார் தலையில் மயிர் வளரும்; என்று கூறினார்.

கார்த்திகேயன் என்ற காவியம் யாழ். இந்துக்கல்லூரியின் நூற்றாண்டு வரலாற்றில் ஒரு பெரும் படைப்பு.

நன்றி — (ஈழநாடு)

# எங்கள் ஐயா

— திருமதி ராணிரத்னதேவி சின்னத்தம்பி —

எங்கள் ஐயாவை ''வான் பயிர்கள்'' என அவராற் குறிப்பிடப்பட்ட பிள்ளைகளாகிய நாங்கள் அறிந்ததைவிட அவரது முன்னாள் மாணவர்களும் சக ஆசிரியர்களும் அவருடன் பழகியோரும் அறிந்ததுதான் அதிகம். அவர் இறந்தபின்னர் அவரைப் பற்றிய பல விடயங்களைப் பிறரிடமிருந்து தான் நாம் கேட்டறிந்தோம். ஒரு அன்பர் குறிப்பிட்டது போன்று எங்கள் ஐயாவின் முசுட்டுக் கோபமும் தனது நேரத்திற் பெரும்பகுதியை வெளியே செலவிட்டதும் எங்களை அவரிடமிருந்து எவ்வளவோ பிரித்து வைத்திருந்தன.

எது எவ்வாறாயினும் அவரை நான் எனது வாழ்க்கையில் ஒரு அன்புமிகுந்த மகனாக; பொறுப்புணர்வுடைய சகோதரனாக; கட்டியவளை எந்நிலையிலும் கைவிடாத உதாரண புருஷனாக; ஐந்து பெண்களையும், நோயால் வலது குறைந்த ஓர் ஆண்மகனையும் பெற்றும் மனதளவில் ஆண்டியாகாத பாசமிக்க தந்தையாக; நல்லாசிரியனாக: இலக்கிய ஆர்வலனாக; விளையாட்டு வீரனாக; எல்லாவற்றுக்கும் மேலாக தான் இளவயதுமுதல் ஈடுபாடுகொண்ட கொள்கைகளில் இறுதிவரை ஊன்றி நின்ற ஒரு அரசியல்வாதியாக; சமூக சேவையாளனாக; மென்மையான, இளகிய அன்பிதயம் கொண்ட ஒரு மனிதனாகக் கண்டிருக்கின்றேன்.

செல்லுமிடமெல்லாம் இன்னாரின் பிள்ளைகள் என எம்மை மற்றவர் இனங்காணக் கூடியதாக வாழ்ந்து மறைந்ததே அவர் எங்களுக்கு விட்டுச்சென்ற மிகப்பெரிய சொத்தும், சுகமும், பெருமையும் ஆகும்.

## தந்தையை விஞ்சிய மைந்தன்

உருவத்திலும் உள்ளடக்கத்திலும் தன் தந்தையாரைக் கொண்டு பிறந்தவர் எங்கள் ஐயா. உற்றார் உறவினரை நேசித்துத் தான் உழைத்ததிற் பெரும்பகுதியைச் செலவிட்ட தன் தந்தை யாரை ஒரு படி மிஞ்சி அவர் மனித குலத்தையே நேசிக்க ஆரம்பித்தார். இதன் காரணமாய் தன் மகன் 'பாரிஸ்டராய்' வர வேண்டும் என்று விரும்பிய தன் தந்தையின் ஆசையை நிராசை யாக்கினார் இதையிட்டுத் தன் தந்தையின் மனம் நோகக்கூடா தென்பதற்காக ' உங்கள் மகன் உங்களைப் போலத்தான் இருப்பான் '' என்று எழுதிச் சமாளித்ததாய்ப் பெருமைப்பட்டுக் கொள்வார். இதேபோன்றுதான் தாய் தந்தையரின் சம்மதம் பெறாது தனது மனதுக்குப்பிடித்த பெண்ணை மணந்து கொண்ட விடயத்தைக் கூறும் போதும் ''கடிதத்தில் 'I' என்று எழுதி வந்ததை 'We' என்று மாற்றி எழுதினேன், ராணி பிறந்ததும் 'We Three' என எழுதி முற்றாகச் சமாளித்து விட்டேன்'' எனச் சிரித்துக்கொண்டு கூறுவார். தனது தாயாரதும், எனது தாயாரின் தாயாரதும் பெயரை இணைத்தே எனக்குப் பெயர்சூட்டினார். அதைக்கூடப் பெருமையாகத்தான் சொல்லிக் கொள்வார்.

ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாகத் தாயகம் திரும்பாது இருந்து திரும்பிய தனது தந்தையைக் கொழும்பிலிருந்து அழைத்து வந்த போது ஒரு சாதனை வீரனின் பெருமிதமும், வந்து ஓராண்டு காலத்துக்குள் மறைந்த தன் தந்தையின் இறுதிக் கடமைகளை முடித்தபோது ஒரு கர்மவீரனின் பெருமிதமும் அவரிடத்திற் காணப்பட்டன. தாய்தந்தையர் இருவருக்கும் 'கொள்ளிக்கடன்' செய்யத் தனக்குத்தான் கிடைத்ததென வருவோர் போவோருக்கெல்லாம் சொல்லி மாய்ந்து போவார் என் தந்தை.

தனது திருமணம் உட்பட மலேசியாவில் இருந்து இங்கே வந்து, திருமணம் செய்துகொண்ட தம்பியாரின் திருமணம், தன்னுடன் இருந்து வளர்ந்த தங்கையர் இருவரின் திருமணம் ஆகிய தன் வீட்டுக் கல்யாணங்கள் அனைத்தையும் செய்து முடிக்கவும், காணவும் தனக்குத்தான் பேறு கிடைத்தது என்பதையிட்டு மிகவும் மனத்திருப்தியடைந்தவர் எங்கள் ஐயா.

நோயாளியானதன் காரணமாய்க் கணவனாற் கைவிடப் பட்ட தனது தங்கையைப் பொறுப்பேற்றுப் பராமரித்த சமயத் தில். தனது குடும்பத்திலேயே புத்திசாலியான அவரது வாழ்க்கை இப்படித் துக்ககரமானதாய் அமைந்ததற்காக மனம் நொந்து போனவர் என் தந்தை.

## குடும்ப வாழ்வே பொதுவாழ்வு

எனது தாயாரைத் திருமணம் செய்தபோது அவர் தனது வாழ்க்கைமுறையுடன் முரண்படாது, இணைந்து வாழவேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்தாராம் என்று சொல்வார் என் தாயார். இருவரும் வாழ்க்கையில் எத்தனையோ மேடுபள்ளங்களைக் கண்டார்கள். இடையிடையே முரண்பாடுகளும் இழுபறிகளும் ஏற்படாமலும் இல்லை. ஆனாலும் எனது தந்தையாரின் சமூகவாழ்வு இவ்வளவு சிறப்புற அமைந்ததற்கு என் தாயார் பெரும் பங்காற்றினார் என்றுதான் கூறவேண்டும்

எனது தந்தையும், தாயாரும் திருமணம் செய்துகொண்டது முதல் கடைசிவரை தாங்கள் வளர்ந்து வந்த குடும்பத்தைச் சமாளித்துக் கொண்டதோடு உற்றார், உறவினர், நண்பர் என என்றும் எப்போதும் நேரகாலமின்றி வந்து போனவரையும் வருடக் கணக்காக உடன் வாழ்ந்தவரையும் குறிப்பாகத் தமது தாழ்ந்த பொருளாதார நிலையிற் தாங்கிவந்தது, அவர்களது குடும்ப வாழ்வுகூடப் பொதுவாழ்வாக அமைந்ததையே காட்டுகிறது.

எங்கள் வாழ்க்கையின் பெரும்பகுதி ஐந்து ஆறு குடும்பங்களைச் சேர்ந்த பதினைந்து, பதினாறு பேரைக்கொண்ட ''கம்யூன்'' வாழ்க்கையாகவே அமைந்தது. இவ்வாழ்க்கை முறையாற் தன்னைக் கவனிக்க நேரமின்றி 'அல்சர்' நோய் வாய்ப்பட்டு என் தாயார் துடிதுடித்த நாட்கள் எத்தனையோ!

## மனைவியைப் பேணிய கணவன்

*1960* ஆம் ஆண்டில் செய்யப்பட்ட அறுவைச் சிகிச்சை காரணமாக தன் மனநிலை தளம்பிய, எங்கள் தாயாரைத் தன் கடைசிக் காலம்வரை தன் இமைகளால் மூடிப் பாதுகாத்தவர்,

எங்கள் ஐயா வெளிவேலை முடிந்து இரவு பத்துப் பன்னிரண்டு மணிக்கு வீடுதிரும்பும் என் தந்தையார் குளித்துச் சாப்பிடும்வரை காத்திருந்து விட்டு, ஓடிப்போய்ப் படுத்துவிடுவேன் நான். அதன் பின்னர் என் தாயார் நாங்கள் குடியிருந்த வீட்டின் ஏழெட்டுப் பரப்பு காணியையும் கல்லிலும் முள்ளிலும் சுற்றிவர அவருக்குப் பின்னால் பாதுகாப்புக்காக நடந்து செல்வார் என் தந்தை. உத்தியோகபூர்வமற்ற விடயமாய்ச் செல்லும் போது கொழும்புக்கென்றாலும் பிற இடங்களுக்கென்றாலும், ஏன் சீனத் தூதரகத்திற்கே கூட என் தாயாரின் விருப்பத்தை அலட்சியம் செய்யாது, இந்நிலையிலும் சிறிதளவு கூச்சமுமின்றி என் தாயாரை உடனழைத்துச் சென்று வந்தவர் எங்கள் ஐயா.

## அன்பும் அக்கறையும் உடைய தந்தை

ஒரே வீட்டிலிருந்தும் காலையிற் சென்று இரவிற் திரும்பும் தந்தையாரை நாள் முழுக்க பிள்ளைகளாகிய நாங்கள் காணாமல் இருந்த நாட்களே அநேகம். எங்கள் கல்வியிலோ, வளர்ச்சியிலோ அவரால் அதிக அக்கறைகாட்டமுடியவில்லை. அதையெல்லாம் ஈடுசெய்தவர் எங்கள் அருமைத் தாயார்தான். ' உங்களுக்கென்ன ஐயா பாடம் சொல்லித் தருவார் '' என உற்றாரும், மற்றோரும் கூறும்போது நாங்கள் எங்களுக்குள்ளேயே சிரித்துக்கொள்வோம். சுகவீனம் காரணமாகவோ வேறு காரணமாகவோ பாடசாலை செல்லாமல் விட்டதற்கான மன்னிப்புக் கடிதம் எழுதித் தரும் சமயத்தில் கடிதத்தில் குறிப்பிடுவதற்கு நாங்கள் எத்தனையாம் வகுப்பு படிக்கிறோம் என்று கேட்பார் எங்கள் தந்தையார். ஆனால் இரவிற் தூங்கும்போது யாராவது இருமினால் பெயர் சொல்லி இன்னாரா இருமுவது என்று கேட்காதிருக்குமளவுக்கு அவர் அன்பும் அக்கறையும் அற்றவராயும் இருந்துவிடவில்லை.

நான் H. S. C படித்தபோது தன் நன்மாணாக்கர் ஒருவரிடமிருந்து எனக்குப் புவியியற் குறிப்புகளைத் தானே வாங்கி வந்து தந்த என் தந்தையின் அக்கறையையும் நான் மறப்பதற்கில்லை. அவரது அன்பும், அக்கறையும் எமக்கு இன்னும் அதிகமாகக் கிடைத்திருந்தால் நாங்கள் எவ்வளவு பாக்கியசாலிகளாக இருந்திருப்போம் என்றே இவ்விடத்தில் நான் எண்ணித் தவிக்கிறேன்.

எனது தங்கை ஒரு தடவை ஒரு திருமணத்திற்குச் சென்று திரும்பிவரும் வழியில் ஒருவன் எனது தங்கையின் சங்கிலியை அறுத்துச் சென்றுவிட்டான். எனது தந்தையார் சங்கிலி போனது பற்றிப் பதறாமல் எனது தங்கையை முதலிற் கேட்ட கேள்வி 'கழுத்தில் காயம் ஏதேனும் ஏற்பட்டுவிட்டதா ஆச்சி?' என்பதுதான்.

எவரையும் தனக்காக வருத்தக்கூடாது என்ற நல்லியல்பு கொண்ட எங்கள் ஐயா பெற்ற பிள்ளைகளுக்குக் கூடத் தொல்லை கொடுக்க விரும்பாதவர்.

நாங்கள் சமையல் வேலையில் அமளியாக இருக்கும்போது தனக்குத் தேநீர் குடிக்கவேண்டும் போல் இருந்தால் குசினியை ஓரிருமுறை வலம் வந்து விட்டு மெதுவாக ''அடுப்பில் சுடுநீர் இருக்கோ, ஆச்சி!' என்று கேட்பார்.

உடுப்புகளுக்கு ஸ்திரிக்கை போட்டுக்கொண்டிருக்கும் சமயத்தில் தனக்கு எங்கேயாவது போகவேண்டி இருந்தால் ''இந்த ஷேட்டுக்கும் கடைசிச் சூட்டைப் பிடித்துவிடு ஆச்சி!'' என்று அன்புடன் கேட்பார்.

ஏன், தனது இறுதி நேரத்தில் நெஞ்சுவலியாற் துடிதுடித்த போதுகூட பள்ளிக்கூட வேலை செய்துகொண்டிருந்த எனது தங்கையைக் குழப்பக்கூடாதென்று தன் நெஞ்சுவலியைத் தாங்கிக் கொண்டாராம். அவர் நிம்மதியின்றி நடந்து திரிவதை அவதானித்த தங்கைதான் அவருக்குத் தானே தேநீர் ஊற்றிக் கொடுத்தாராம். அந்தத் தெம்புடன், வந்த ஒருவருக்குக் கடிதம் எழுதியபடியே தன் சுயநினைவிழந்து போனார் என் தந்தையார்.

குடும்பத்தைக் கொண்டு நடத்துவதில் அதிக சிரத்தையும், நேரமும் அற்றவராய் இருந்தாலும் மனம்நிறைந்த பாசமும், குடும்பப் பிணைப்பும் கொண்டிருந்தார் என் தந்தை. வீட்டில் விசேடமென்றால் இரத்த உறவு முறை பேணுவதிலும்; உறவினர், நண்பர் வீட்டில் விசேடமென்றால் அழைப்பை மதித்து ஒருமுறை தலையைக் காட்டிவிட்டாவது வருவதிலும் மிகக் கருத்தாய் இருந்தார்.

பிள்ளைகளாகிய எங்களை நன்கு கவனிக்க நேரமும், வசதியும் எங்கள் ஐயாவுக்கு இருக்கவில்லை. இதையிட்டு அவரும் கவலைப்படாமல் இல்லை.

பின்னர் அவர் தமது பேரப்பிள்ளைகளைப் பராமரித்துக் கவனித்ததைக் குறிப்பிடவேண்டும். குறிப்பாக மூத்த பேரனை அவர் பெரிதும் பராமரித்தார்.

## மனிதரை மதிக்கப் பழக்கியவர்

எங்களுக்கெல்லாம் மனிதனை மனிதனாக மதிக்கப் பழக்கியவர் எங்கள் ஐயா. தன் நடத்தையாலேயே இதை எமக்குப் போதித்தார். எங்கள் வீட்டுக்கு வரும் தன்னுடன் படித்த சலவைத் தொழிலாளியையும், உயர்ந்த உத்தியோகம் பார்ப்பவரையும் ஒரேவித பெருமிதத் தொனியுடனேயே எமக்கு அறிமுகம் செய்து வைப்பார்.

நான் ஒருதடவை வந்தவர்களுக்குத் தேநீர் பரிமாறிய போது 'கப்'பிற் கொடுக்காது கிளாஸில் கொடுத்துவிட்டேன் என்று என்னிடம் விளக்கம் கேட்டார் என் தந்தை. எங்கே நான் மனிதரில் தராதரம் பார்த்து விட்டேனோ என்று தந்தையார் பயந்ததுதான் அதற்குக் காரணம்.

'இரக்கப் போனாலும் சிறக்கப் போ' என்பதற்கமைய பொருளாதார நிலைக்கேற்ப கோட் சூட் போடவேண்டிய இடங்களுக்கு நாஷனல் உடுத்துவார். சப்பாத்துக்குப் பொலிஷ் போடாவிட்டாலும் அதைத் துடைத்துவிட்டுச் செல்ல மறப்பதில்லை.

''பத்துச் சீலை வைத்திருக்கும் நீங்கள் சீலை இல்லாதவருக்கு ஏன் ஒரு சீலை கொடுக்கக்கூடாது'' என்று இரக்க சிந்தையையும் சிக்கனத்தையும் படிப்பித்தவர் எங்கள் தந்தை.

சுருங்கக்கூறின், தன் வாழ்க்கை முறையால் மனிதநேயத்தை, இரக்கத்தை, எளிமையை, பொறுமையை, நேர்மையை, அச்சமின்மையை, மனச்சாட்சிக்குப் பயந்து வாழ்தலை, சொற்திறம்பாமையை வாழ்க்கைச் சவால்களை எதிர்நோக்கும் உறுதியை எமக்குப் போதித்ததுடன் இன்றும் எமக்கு வழிகாட்டியாக விளங்குபவர் எங்கள் ஐயா!

★

# கார்த்திகேசன் பகிடிகள்
## ருசிக்கச் சில......

— தொகுப்பு: பாரதிநேசன் —

### ✶ கந்தன் எத்தனை கந்தனடி

அறுபதாம் ஆண்டுகளின் பிற்பாதியில் ஆலயப் பிரவேசப் போராட்டம் நடைபெற்றது.

மாவிட்டபுரம் கந்தசாமி கோயில் பிரவேசம் தான் மிகவும் பிந்தியதாக இருந்தது. இதற்கு மாஸ்ரர் தந்த விளக்கம்:

சன்னிதிக் கந்தன் ஏழைகளின் கந்தன்; அன்னதானக் கந்தன். ஆகவே பிரவேசம் முன்னதாக நடந்தது.

நல்லூர்க் கந்தன் நகரக் கந்தன்; பணக்காரக் கந்தன்; முதலாளித்துவக் கந்தன்; அவனுக்குப் பணம்தான் முக்கியம். ஆகவே மாவிட்டபுரத்திலும் முன்னதாக பிரவேசம் நடந்தது.

மாவிட்டபுரத்துக் கந்தன் நிலபுலமுள்ளவர்களின் கந்தன். அதனாற்தான் அத்தனை தடங்கல்.

### ✶ சிவப்புச் சாயம்

வட பகுதிக் கம்யூனிஸ்ட் கட்சியின் முன்னாள் பிரபலம் ஒருவர் கார் ஒன்றை, அதுவும் சிவப்புநிறக் கார் ஒன்றை வாங்கினார்.

அப்பொழுது மாஸ்ரர் கூறினார்:
அவருடைய சாயம் இப்பொழுது காரில் இறங்கி விட்டது

## ★ 'சிற்' பிடித்தல்

காலஞ்சென்ற தமிழ் அரசியல்வாதி ஒருவர் தாம் போட்டியிட்ட தேர்தல் தொகுதியில் தோற்றதன்பின் காங்கேசன்துறைத் தொகுதிக்குப் போட்டியிடச் சென்றார்.

''அவர் 'சிற்' பிடிக்க காங்கேசன்துறைக்குச் சென்றிருக்கிறார்'' என்று மாஸ்ரர் கூறினார். (புகையிரதம் ஓடியபோது பலரும் காங்கேசன்துறைக்குச் சென்று சிற் பிடிப்பது வழக்கமாக இருந்தது).

## ★ 'ஜூனியர் டிஸ்க்'

இந்துக் கல்லூரியில் செல்லத்துரை இல்ல ஆசிரியராக இருந்த போது இல்லநிதியாக ஒரு ரூபா ''டிஸ்கை'' எறியுமாறு மாணவர்களைக் கேட்டுக்கொண்டார்.

அப்பொழுது சூட்டியான ஒரு மாணவன் ''சேர் அரை ரூபா 'டிஸ்க்' எறிந்தால் எப்படி'' என்று கேட்டான்.

உடனே பதில் வந்தது; அது ஜூனியர் டிஸ்க் என்று' (50 சத, 1 ரூபா குற்றிகளை வைத்தே இந்த 'டிஸ்க்' பகிடி)

## ★ ஜீ.ஜீ. யின் 'ஆங்கிள் சொட்'

தமிழ்க் காங்கிரஸ் தலைவர் காலம் சென்ற திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலம் தமது தமிழ்ச் சொற்பொழிவின் இடையே சற்று நேரம் ஆங்கிலத்தில் முழங்கி பார்வையாளர்களை மயங்க வைப்பார். இது பற்றி மாஸ்ரர்:

உதைபந்தாட்டத்தில் ''கோணர் கிக்'' மூலம் 'கோல்' செலுத்துவது ஒரு விறுவிறுப்பான காட்சி. அதுபோல் ஜீ. ஜீ. யின் ஆங்கில இடைப்பேச்சு ஒரு ''ஆங்கிள் சொட்''.

## ★ சேமியாக் குணம்

''வெள்ளிக்கிழமைகளில் மதிய போசனத்துக்குப் பின் மாணவர்கள் தூங்கி விழுவதுண்டு. இதற்கு அவர் கூறுவார்:

''வெள்ளிக்கிழமை எட்டுக் கறியும் சோறும்; அதன் மேல் பாயாசம் - சேமியாக் குணம்.'' ( யாழ். இந்துக் கல்லூரி விடுதி அப்பொழுது பாயாசத்துக்கு மிகப் பிரபல்யமாக இருந்தது.)

## ✶ 'முறுகன்ரீ''

ஒரு தடவை கொழும்புப் பயணத்தின் போது முறிகண்டியில் பஸ் தரித்து நின்றது. மாஸ்ரரின் சொல் விளையாட்டில் முறிகண்டி என்பது ''முறுகன் ரீ'' ஆகியது.

## ✶ உள்ளங்கை வியர்வை

கார்த்திகேசன் மாஸ்டருடன் மாணவர்கள் நெருங்கிப் பழகுவார்கள். அவருக்கு அவர்கள் பயப்படுவதில்லை. இது அவருக்கும் தெரியும்.

ஒரு நாள் வகுப்பில் மாணவன் ஒருவன் மிகவும் குழப்படியாக இருந்தான். மாஸ்ரர் நடிப்புக் கோபத்துடன் அவனை முன்னுக்கு வரும்படி அதட்டிக் கூப்பிட்டு அடிப்பது போல் பாசாங்கு செய்து பேசினார்.

பின் கேட்டார்:

''நீ பயந்துவிட்டாய் என்ன?''

மாணவன் கூறினான்; ''இல்லை சேர் நான் உங்களுக்கு ஏன் பயப்படுகின்றேன். நீங்கள் அடிக்கமாட்டீர்கள் என்று எனக்குத் தெரியும் தானே.''

''இல்லை நீ பயந்துபோனாய் எங்கே உள்ளங்கையை கரும் பலகையில் வை''

மாணவனுடைய உள்ளங்கை வியர்வை கரும்பலகையில் பதிந்திருந்தது.

''பார்த்தியா பயந்து போனாய்'' என்று மாஸ்ரர் அனுதாபத்துடன் கூறினார்.

## ✶ போதிய பணம் இருக்கா?

கார்த்திகேசன் மாஸ்ரர் யாழ். இந்துக் கல்லூரியின் அதிபராக இருந்த காலத்தில், ஒருநாள் இரவு மூன்று விடுதி மாணவர்கள் படம் பார்க்க மதிலைப் பாய்ந்து கொண்டிருந்தார்கள்

அப்பொழுது கார்த்திகேசன்மாஸ்ரர் வந்துவிட்டார். ஏறிய மதிலிலேயே ஒரு மாணவன் நின்றுவிட்டான்.

''மூன்றுபேரும் படம் பார்க்கப் போதியபணம் இருக்கா?'' — இவ்வளவுதான் கார்த்திகேசன் மாஸ்ரர் கேட்டார். அந்த மாணவர்கள் அதற்குப் பிறகு அத்தகைய முயற்சியில் ஈடுபடவேயில்லை.

அதுமட்டும் அல்ல இதைக் குறிப்பிடும்போது இன்றும் தலையைச் சொறிந்த வண்ணம் '' பெரிய சீரழிவாய்ப் போச்சு'' என்றும் கூறுவார்கள் அந்த மாணவர்கள்.

## ✶ அடிக்கமாட்டார்... ஆனால்...

கார்த்திகேசன் மாஸ்ரர் அதிபரானவுடன் குழப்படி மாணவர்களுக்கு மிகவும் குதூகலம் ஆகிவிட்டது.

மாஸ்ரரிடம் நேரே சென்று ''சேர், நாங்கள் கிளாஸ் 'கட்' பண்ணினால் இனியும் அடிக்கமாட்டீங்கள் தானே?'' என்று கேட்டார்கள்.

அவர் சர்வசாதாரணமாக '' காத்தார் இனியும் அடிக்க மாட்டார் ..... டிஸ்மிஸ் '' என்று கூறி மாணவரின் வாயை அடக்கினார்.

## ✶ கேளம்பி ஷொட்

கார்த்திகேசன் மாஸ்ரர் சிலவேளைகளில் மாணவர்களின் குறும்பைப் பொறுக்க முடியாமல் '' விட்டன் எண்டால் உனக்கு கேளம்பி ஷொட் '' என்று உறுமுவாராம்.

அடிக்கடி டோஸ் வாங்கிய மாணவர்களுக்குத்தான் தெரியும் அது '' கோம்பயன்மணல் மயான ஷொட் '' என்று.

## ✶ காத்தி சுவையேறிய தேற்றம்

மாஸ்ரர் கணிதபாடத்தில் கேத்திரகணிதத் தேற்றங்களைப் படிப்பிக்கும்போது மிகவும் சுவையாக ஒவ்வொரு தேற்றத்துக்கும் ஒரு பட்டப்பெயரை வைத்திருந்தார். மாணவர்களின் மீட்டலின்போது நூற்றுச்சொச்சத் தேற்றங்களினதும் பட்டப் பெயரைக் குறிப்பிட்டுக் கேள்வி கேட்பார்.

உதாரணத்துக்கு சில தேற்றங்களும் அவற்றின் பட்டப் பெயர்களும்:

**இடியப்ப உரல் தேற்றம்:** இரு நேர்கோடுகள் இடைவெட்டும் போது உருவாகும் குத்தெதிர் கோணங்கள் சமன் எனும் தேற்றம்.

**புக்கைத்தாளிசைத் தேற்றம்:** அரைவட்டம் $180^\circ$ ஐத் தரும் தேற்றம்.

**அல்வாத்துண்டுத் தேற்றம்:** இணைகரம் ஒன்றை மூலைவிட்டத்தினூடு பிரிக்க இரு சர்வசமமான முக்கோணங்கள் கிடைக்கும் தேற்றம்.

**பனங்கிழங்குத் தேற்றம்:** ஏதாவது இரண்டு கோணங்கள் சமனான ஒரு முக்கோணத்தை, அவ்விரு கோணங்களுக்கும் பொதுவான பக்கத்தை இருசமகூறிடும் வகையில் இரண்டாக்கினால் இரு சர்வசமமான முக்கோணங்கள் பெறப்படும் எனும் தேற்றம்.

**ஏரிக்கரைத் தேற்றம்:** ஒரு சமபக்க முக்கோணத்தின் அடியை இருசமகூறிடும் வகையில் வரையப்படும் செங்குத்து அம் முக்கோணத்தை இருசமகூறிடும் எனும் தேற்றம். ★



காத்தியின் பேர்த்தி
சினோதயா வரைந்த படம்

## சிந்தனையால்
## மிக உயர்ந்தோன்!

*ஆங்கிலத்திற் பேரறிஞன்*
*அருந்தமிழில் வல்லோன்*
*அன்பார்ந்த நெஞ்சுடையோன்*
*அமுதுநிகர் சொல்லோன்*
*தீங்கறியா நல்லுளத்தோன்*
*திகழ்பொதுமைக் கொள்கை*
*தெளிந்துணர்ந்தே தெளிந்தபடி*
*வாழ்ந்திட்ட மேலோன்!*

*சிந்தனையால் மிகஉயர்ந்தோன்*
*ஆசிரியத் தொழிலால்*
*சிறப்பான மாணவரைச்*
*செகம்வாழக் கொடுத்தோன்*
*வந்தனைக்கே உரியஎங்கள்*
" கார்த்திகேசன் மாஸ்ரர் "
*வாழ்வுதனிக் காவியமே*
*யாவருமே ஏற்பார்.*

— புலவர் ம. பார்வதிநாதசிவம்

அருண் பிறின்டேர்ஸ் அன்ட் பப்பிளிஷேர்ஸ் - யாழ்ப்பாணம்.